நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்



நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 21 (5—1—68) வெள்ளி

ஆற்காடு இராமசாமி கண்ட தலைவர்

“அண்ணாவின் பாதை கடுமையானதாக இருந்தது; சோதனைமிக்க நாட்களை அவர் கடந்துவந்தார்; எல்லாவற்றையும்விட்டுத் தனிமையில் ஒதுங்கிவிட அவர் எண்ணியதுண்டு; ஆனாலும், தனது விடா முயற்சியின் காரணமாக இன்றைய உயர் நிலையை அவர் அடைந்துள்ளார்.

“ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கையைப்பற்றிச் சொல்லும்போது, ‘மரக் குடிலிலிருந்து வெள்ளை மாளிகைக்குச் சென்றார்’ என்பார்கள்; அதுபோல் அண்ணா வாழ்க்கையும் அமைந்துள்ளது; ஆனால் இன்னும் அவர், அவரது புகழின் உச்சியை எட்டவில்லை.”

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சி துவங்கிவிட்டது. இந்த மங்களச் செய்தியை ஆதரிக்கின்ற முறையில், ‘தமிழகத்தின முதலமைச்சர்’ என்ற நிலையிலல்லாது, ‘தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துவருபவர்—தமிழகத்தாரின் வாழ்வில் வளத்தைப் பெருக்கிவருபவர்—இந்தி ஏகாதிபத்தியத் தாக்குதலைச் சந்திக்கவேண்டிய முறையில் சந்தித்து முறியடித்துக்கொண்டே வெற்றிப் பாதையில் வீரநடை போட்டுவருபவர்’—என்ற நிலையில் வெண்கலத்தால் உருவாக்கபபட்ட அண்ணா அவர்களின் உருவச் சிலையை, கல்வியிலும் கேள்வியிலும்—நாவன்மையிலும் எழுத்தாற்றலிலும்—அரசியல் புலமையிலும் ஒழுங்கிலும்—சீலத்திலும் உலக அனுபவத்திலும் தங்களுக்குத் தாங்களே இணை என்ற கருத்துக்கு உறைவிடமாக இருந்துவரக்கூடிய ஆற்காடு இரட்டையர்களில் முதல்வராக விளங்கும் தமிழ்க்குடி பிறந்த முதியவர் இராமசாமி அவர்கள் திறந்துவைததிருக்கின்றார்.

அண்ணா அவர்களின் உருவச் சிலையைத் திறந்துவைத்த நேரத்தில், ஆற்காடு இராமசாமி அவர்கள், அண்ணா அவர்களைக் குறித்து உணர்ச்சி பொங்க—உள்ளத்தைத் திறந்து நல்ல பல கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். அப்பெரியவர் கூறியவற்றில் சிறு பகுதியைத்தான் தலைப்பில் வெளியிட்டிருக்கின்றோம்.

அண்ணா அவர்களின் உருவச் சிலையைத் திறந்துவைத்து அண்ணாவைப் பற்றிப் பாராட்டிப் பேசியுள்ள ஆற்காடு இராமசாமி அவர்களின் ஆங்கிலப் புலமை—நாவன்மை—எழுத்தாற்றல்—அன்றைய சென்னை மாநிலத்துக்கு அவர் புரிந்துள்ள சேவை—தமது ஆற்றல் மிக்க எழுத்தாலும் நாவன்மையாலும சனநாயகக் கோட்பாட்டிற்கு அன்றைய சென்னை மாநிலத்தில் வித்திட்ட தனிச் சிறப்பு—ஆகிய எந்த ஒன்றைப் பற்றியும் சிறிதளவாவது தெரிந்திருப்பவர்கள், அவரை ஒத்த வயதினராகததான் இருந்திட முடியும்.

அன்றைய சென்னை மாநிலத்தில், மக்களாட்சி முறைக்குத் தம் அரும் சேவையால் அடிக்கல் நாட்டியவர் ஆற்காடு இராமசாமி அவர்கள்தான் என்பது குறிப்பிடததக்கது. அன்று நீதிக் கட்சி நடத்திய ஆங்கில நாளிதழான ‘ஜஸ்டிஸ்’ இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று, நாள் தவறாது தொடர்ந்து அவர் எழுதிவந்த தலையங்கங்கள் ஒவ்வொன்றும், ஆங்கில மொழியில் ஆக்கப்பட்ட இலக்கியங்களாகும். ஆங்கிலத்தில் அவர் பெற்றிருக்கின்ற நாவன்மை, ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆங்கிலப் புலவர்களையே வெட்கித் தலைகுனிந்திட வைத்திடும்.

ஆற்காடு இராமசாமி, நீதிக் கட்சியின் ‘மூளை’—என்று குறிப்பிட்டாலும், அது மிகையாகாது. அன்றைய இரட்டை ஆட்சியில் சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்து அவர் பேசியுள்ள பேச்சும், தந்துள்ள விளக்கங்களும்—பதில்களும், தனி வரலாறு ஆகும். இந்து மதத் தர்ம பரிபாலனச் சட்டததை நிறைவேற்றிய நேரத்தில், சட்டமன்றத்தில் அதற்குக் கிளம்பிய மூர்க்கமான எதிர்ப்பை, தமது சொல்லாற்றலால் ஆற்காடு இராமசாமி தகர்த்துத் தவிடுபொடியாக்கியது, சென்னை சட்டமன்ற நிகழ்ச்சியில் பொன்னேடு ஆகும்.

முதல் உலகப் பெரும் போரைத் துவக்கமாகக் கொண்டு 1936-ம் ஆண்டை இறுதியாகக் கொண்ட சென்னை மாநில அரசியல் வரலாற்றில், ஆற்காடு இராமசாமி ஏற்படுததியிருக்கின்ற முத்திரை, என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியதாகும்.

இத்தகைய அரசியல் விற்பன்னராகப் புகழ் பெற்றுள்ள ஆற்காடு இராமசாமி அவர்கள்தான், நமது இதயங்கள் அனைத்தையும் தமக்குரிய உறையுள்ளாகக் கொண்டிருக்கின்ற அண்ணாவின் உருவச் சிலையைத் திறந்து வைத்துள்ளார்கள்; அண்ணாவின் அறிவாற்றல்—செய்துள்ள பணிகள் பற்றியெல்லாம் ஆர்வம் பொங்க—மகிழ்ச்சி கொப்பளிக்க விவரித்தும் கூறியுள்ளார்கள்.

எவருடைய ஆங்கில நாவன்மையைப் பின்பற்றிப் பயிலத்தக்கதாகக் கொண்டு—நன்கு பயின்று தேர்ச்சிப்பெற்று அண்ணா அவர்கள் தமது நாவன்மையை நிலைநாட்டிக்கொண்டிருக்கின்றாரோ, அதே பேராசிரியரான ஆற்காடு இராமசாமி அவர்கள், அண்ணாவின் நாவன்மையைப் பாராட்டிப் புகழ்கின்றார் என்றால், அது கண்டு பூரிக்காத தமிழ் உள்ளம்—‘நாம் பெற்றிருக்கின்ற தலைவரின் நாவன்மை அத்தகைய சிறப்புடையதா’ என வியக்காத தமிழ் நெஞ்சம், இன்றையத் தமிழகத்தில் இருந்திட முடியுமா?

“தமிழ்ப் பேச்சாற்றலில் அவர் எல்லோரையும் மீறியவர்; ஆங்கிலத்திலும் அவருக்கு இணையானவர் உலகில் இல்லை; நா நலம் வாய்ந்த பேச்சாளர் அவர்.”

இவ்வாறு, அண்ணா அவர்கள் பெற்றுள்ள ஆங்கிலச் சொல்லாற்றலை வியந்து கூறிய ஆற்காடு இராமசாமி அவர்கள், அண்ணா பெற்றிருக்கின்ற நா நலத்திற்குள்ள தனித் தன்மையையும் எடுத்துக் கூறியுள்ளார்:—

“நா நலம் மட்டும் வேறு சிலரிடம் இருக்கக்கூடும்;

தமிழ் வளர்த்த ஆன்றோர்-சான்றோர் சிலைகள்

மக்களுக்கு மட்டுமன்றி மன்னர்கட்கும் அறிவுரை சொன்ன தமிழ்ப் பாட்டி

ஔவை

சோப்பு சிப்பு விற்க வந்து சொந்த மண்ணை விலை பேசிய வெள்ளையரை எதிர்த்துக் கப்பலோட்டிய தமிழர்

வ. உ. சிதம்பரனார்

ஈரடியில் உலகளந்து தமிழுக்கு ஈடற்ற புகழ் சேர்த்த

வள்ளுவப் பெரியார்

சமுதாயப் புரட்சிக்கு உரமூட்டும் கவிதை செய்த—‘முகில் கிழித்து வெளிவந்த முழுமதி’

பாவேந்தர் பாரதிதாசன்

(கி.பி. 1891—1966)

விருத்தப் பாப் பாடி பெருங்காவிய விருந்து படைத்த

கவியரசர் கம்பர்

பாட்டும் உரையும் எனத் தமிழின் இருவகை வழக்கும் இனிதறிந்து இலக்கணமும் சதுரகராதியும் செய்த

வீரமா முனிவர்

(கி.பி. 1680—1742)

ஏகாதிபத்திய வெறியர் பொடிப் பொடியாகிட ஆவேசக் கவிதை பாடிய

சுப்பிரமணிய பாரதியார்

(கி.பி. 1882—1921)

மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும் கையிற் தனிச் சிலம்பும் கண்ணீருமாய் மன்னன்முன் வழக்குரைத்து நீதிநிலைநாட்டிய கற்புக்கரசி

கண்ணகி

உயர்தனிச் செம்மொழியின் உண்மைச் சிறப்பை உலகறியச் செய்த உத்தமப் பெரியார்

ஜி. யு. போப்

(கி.பி. 1820—1903)

“அண்ணாவின் சொற்பொழிவுகளிலும், கருத்துக்கள் குவிந்திருக்கும்; இதுவே ஒருவரை, மற்ற மனிதர்க்கெல்லாம் தலைவராக்குகிறது.”

அண்ணா தலைமையில் கழகம் அமைத்துள்ள தமிழக அரசின் நிலையான தன்மையைப் பாராட்டிய ஆற்காடு இராமசாமி அவர்கள், அதற்குள்ள எதிர்ப்பின் போக்கையும், அதை அலட்சியப்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையையும் பின்வரும் கருத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்:—

“எவர் எது சொன்னபோதிலும், அது குறித்தெல்லாம் கவலைப்படாது மேல்நோக்கிச் செல்வோம் மத்திய அமெரிக்காவில் குமுறி அடங்கி, இப்பொழுது புகை கூடக் கக்கிடாத பழைய எரிமலைகள் உண்டு; அதுபோல், பதவி இழந்தோர் இருக்கின்றனர்; அவர்களுடைய ஏச்சுக்களைப் புறக்கணித்து, உறுதியோடும் வலிவோடும் மேல்நோக்கி முன்னேறுவோம்.”

“காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்த தலைவர் அண்ணா; நம் தலைவர்—ஆமாம்—அண்ணா உங்களுக்கு மட்டுமல்ல—எனக்கும் தலைவரே—அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அந்த உயர்நிலையை அடைந்திட வேண்டும்; இந்தியா முழுவதற்கும் தலைமைப் பொறுப்பை அண்ணா ஏற்றிடும் அந்நாளைக் காண, நான் ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.”

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் செய்து தென்னகத்தின் மறு[illegible] சிக்கு வித்திட்ட பெரியார்

இராபர்ட் கால்டுவெ[illegible]

தமிழ்க் கலைகளைத் தரமறிந்து போற்றுக!

நமது மூதாதையர் வளர்த்த அழகுக் கலைகள், குறைந்தது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ளன. இக்கலைகள் இப்போது அழிந்துகொண்டும் அழிக்கப்பட்டுக்கொண்டும் வருவதை நாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை; ஏனென்றால், நம்மவரில் பெரும்பான்மையோருக்கு—நூற்றில் தொண்ணூற்றொன்பது பேருக்கு—கலைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது; இது வருந்தத்தக்க நிலையாகும்.

நமது முன்னோர் தலைமுறை தலைமுறையாக வளர்த்த கலைகளைப் போற்ற வேண்டுவது, அவர் வழிவந்த நமது கடமையாகும். கலைகளை அழித்துக்கொண்டும் அழிய விட்டுக்கொண்டும் இருப்பது, சமுதாயத்தின் வீழ்ச்சியை அல்லது பிற்போக்கைக் காட்டும் அறிகுறியாகும்; ஏனென்றால், பழைய கலைகளுக்கும்—சமுதாயத்திற்கும் தொடர்பு உண்டு.

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், கலைகளும் அதனையொட்டிய பண்பாடுகளும் சமுதாயத்தில் பரம்பரையாகத் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன; ஆகவே, நமக்கு உரிமைப் பொருளாகிய நமது அழகுக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

தொன்றுதொட்டு—பல்லாண்டு பல்லாண்டுகளாக வளர்ந்துள்ள இக்கலைகள், இப்போது எந்த நிலையில் இருக்கின்றன என்பதைப் பார்ப்போம்:—

காலப்போக்கில் கற்றளிகள் அழிந்தன — அழிகின்றன !

செங்கற் கட்டிடங்கள் விரைவில் அழிந்துவிடுவது இயற்கையே; கருங்கல்லினால் கட்டப்பட்ட கற்றளிகள் நெடுங்காலம் இருக்குமானாலும், அவற்றைப் பேணிப் பாதுகாக்காமல் போனால், அவையும் காலப்போக்கில் அழிந்துவிடும். அவ்வாறு பல கற்றளிகள் அழிந்துவிட்டன—பல அழிந்துகொண்டு இருக்கின்றன.

முதன்முதலாக அமைக்கப்பட்ட கல் கட்டிடங்களில் (கற்றளிகளில்) ஒன்று—மகாபலிபுரம் என்று வழங்கப்படுகிற மாமல்லபுரத்துக் கடற்கரை ஓரத்தில் இருக்கிற கோயில் ஆகும். இக்கோயில் ஏறக்குறைய 1,300 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது; இதை அமைத்தவன் இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன்; இவன், கி. பி. 695 முதல் 722-ம் ஆண்டுவரையில் அரசாண்டான்; காஞ்சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலைக் கட்டியவனும் இவனே!

இவன் கட்டிய மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில், கடல் நீருக்கு அருகில் இருப்பதால், இக்கட்டிடத்து உள்புறத்திலும் மேல்புறத்திலும் ஈரமான உப்பங் காற்று இரவும் பகலும் வீசிக்கொண்டே இருக்கிறது; இதன் காரணமாக, இக்கட்டிடத்தின் கருங்கற்கள் உளுத்துப் போய்விட்டதை இன்று காண்கிறோம்—ஏன்—சில ஆண்டுகளுக்கு முன்பு, கடல் அலைகள் இக்கட்டிடத்தின் படிகளின் மேல் மோதிக்கொண்டிருந்தபோது, 'இக்கட்டிடம் சிறிது காலத்திற்குள்ளாகக் கடல் நீரினால் அழிந்துவிடும்' என்று அஞ்சினோம். நற்காலமாக அரசாங்கத்துப் பழம்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இக்கோயிலில் கடல் அலைகள் மோதாதபடி கற்சுவர் அமைத்து அரண் செய்திருக்கிறார்கள்: இதனால், இக்கோயிலுக்குக் கடல் நீரினால் ஏற்படவிருந்த ஆபத்து நீங்கிவிட்டது; ஆனால் தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தாவிட்டால், கடலில் இருந்து வீசுகிற ஈமிர்ப்பான உப்பங் காற்றினால் கற்கள் உளுத்து உதிர்ந்து, பிறகு கட்டிடமே மறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

எல்லாக் கட்டிடங்களும் பழம்பொருள் பாதுகாப்பாளரின் மேற்பார்வையில் இல்லை; ஆகவே, பெரும்பான்மையான கட்டிடங்கள் சிதைந்து அழிந்துகொண்டிருக்கின்றன.

கடற்கரையிலுள்ள கற்றளிகள்தான் அழிந்துவிடுகின்றன என்று கருதவேண்டாம்; உள்நாட்டிலுள்ள கற்றளிகளும் அழிந்துவிடுகின்றன.

எடுத்துக்காட்டாக, உள்நாடாகிய காஞ்சிபுரத்து அயிராவதேசுவரர் கோயில், மதங்கேசுவரர் கோயில், இறவாஸ்தானக் கோயில் முதலியவைகளாகும்.

இக்கோயில்களை எல்லாம் அரசாங்கத்தார், அழியவிடாமல் தக்கமுறையில் பாதுகாக்க வேண்டும்; ஏனென்றால், பல்லவர் காலத்துக் கட்டிடங்கள் மிகச் சிலதான் இப்போது உள்ளன; இச்சிலவற்றையும் அழிந்துவிடாமல் காப்பாற்ற வேண்டுவது அரசாங்கத்தினதும் நாட்டு மக்களினதும் கடமையாகும்.

பல்லவர் காலத்துக்குப் பிறகு கி. பி. 10-ம் நூற்றாண்டு முதல் அமைக்கப்பட்ட சோழர் காலத்துக் கோயில் கட்டிடங்களும் சில அழிந்துபோயும் சில அழிந்துகொண்டும் இருக்கின்றன!

இருந்த இடந்தெரியாமல் சாசனங்களை அழிப்பதா ?

பழைய கோயில்களைப் புதுப்பிக்கின்ற திருப்பணியைச் செட்டி நாட்டுச் சீமான்கள் செய்துவந்தார்கள்; அவர்களால் புதுப்பிக்கப்பட்ட பழைய கோயில்கள் பல; இதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம்; ஆனால், அவர்கள் செய்த திருப்பணிகளில், சில குறைபாடுகளும் உள்ளன; 'குறைபாடு' என்பதைவிட, 'அழிவு வேலை' என்றே கூறலாம்; அது என்னவென்றால், அந்தக் கோயில்களில் இருந்த பழைய சாசனக் கல்வெட்டுக்களை அழித்துவிட்டது ஒன்று—பழைய சிற்பக் கலையைப் போற்றாதது மற்றொன்று!

பழைய கோயில்களைப் புதுப்பிக்கும்போது அக்கோயில்களில் இருந்த பழைய சாசனங்களை இருந்த இடந் தெரியாமல் அழித்துவிட்டார்கள்! நமது நாட்டுச் சரித்திரம் எழுதுவதற்குச் சாசனங்கள் பேருதவியாக இருக்கின்றன. சாசனங்களை ஆராய்ந்துதான் நமது நாட்டு வரலாறுகள் எழுதப்படுகின்றன. சாசனங்கள் சரித்திர ஆராய்ச்சிக்கு எவ்வளவு பேருதவியாய் இருக்கின்றன என்பது சரித்திர ஆராய்ச்சிக்காரருக்குத் தவிர மற்றப் பாமர மக்களுக்குச் சிறிதும் தெரியாது.

மேலும், கோயில் சாசனங்களிலே, அக்கோயிலுக்கு எழுதி வைக்கப்பட்ட நிலபுலன்களைப் பற்றியும், பொன் பொருள்களைப்பற்றியும் குறித்துவைப்பது வழக்கம்; ஆகவே இந்தச் சாசனங்கள் அக்கோயில்களின் சொத்துக்களைப்பற்றிய ஆதாரங்களாகும். அவற்றை அழித்துவிடுவது, அக்கோயிலுக்குரிய பத்திரங்களையும் ஆதாரங்களையும் அழித்துவிடுவதாகும் அல்லவா? கோயில்களைப் புதுப்பிக்கும்போது, பழைய சாசனங்களை அழிக்காமல் வைக்கவேண்டும்; அல்லது, அவற்றின் படி எடுத்து வேறு கற்களில் எழுதிவைக்க வேண்டும்.

நாட்டிற்குத் துரோகம் செய்வதாக ஆகாதா ?

பண்டைக் காலத்தில் கோயில்களைப் புதுப்பிக்கும்போது, அக்கோயில் சாசனங்களைப் படி எடுத்து எழுதி வைத்தார்கள். தஞ்சை மாவட்டத்துக் கும்பகோணம் தாலுகாவைச் சேர்ந்த திருக்கோடிகாவல்

தமிழறிஞர்
மயிலை சீனி வேங்கடசாமி

கோயிலைப் பண்டைக் காலத்தில் புதுப்பித்தவர் செம்பியன்மாதேவியார் என்னும் சோழகுலத்து அரசியார். இவர் உத்தமச் சோழருடைய தாயார். இவ்வரசியார் இக்கோயிலைப் புதுப்பிப்பதற்கு முன்னர், இக்கோயிலில் இருந்த சாசனங்களையெல்லாம் படி எடுத்துக்கொண்டு, கோயில் வேலை முடிந்தபிறகு அப் படிச் சாசனங்களை இங்கு அமைத்திருக்கிறார். இவ்வாறு இருபத்தாறு சாசனங்களை இவர் படியெடுத்தமைத்திருக்கிறார். இதனால், இச்சாசனங்கள் அழியாமல் இருக்கின்றன.

சாசனங்களைப் படி எடுத்து அமைத்தார் என்பதற்குச் சான்று என்னவென்றால், அச்சாசனங்களின் தொடக்கத்தில், 'ஸ்வஸ்தி ஸ்ரீ. இதுவுமொரு பழங் கற்படி' என்று எழுதியிருப்பதுதான். இவ்வாறு பல சாசனங்கள் பாதுகாக்கப்பட்டதற்குப் பல சான்றுகளைக் கூறலாம்; விரிவஞ்சிக் கூறாமல் விடுகிறோம்.

இக்காலத்தில் கோயில்களைப் புதுப்பிக்கிறவர் அவ்வாறு படி எடுத்துப் பாதுகாக்காமல் சாசனங்களை முழுவதும் அழித்துவிடுகிறார்கள். சாசனப் படி எடுப்பாளர், பழம் பொருளாராய்ச்சிபாளர்கள் (எபிகிராபி, ஆர்க்கியாலஜி இலாகா) கண்டுபிடித்துத் தமது அறிக்கையில் கூறப்பட்ட சாசனங்களில் பல, இப்போது முழுவதும் அழிக்கப்பட்டுள்ளன; இதற்குக் காரணம், அவ்வறிக்கைகள் வெளிவந்த பிறகு, அச்சாசனம் உள்ள கோயிலைப் புதுப்பித்த 'புண்ணியவான்கள்', சாசனங்களைப் படி எடுத்து அமைக்கவும் இல்லை—இருந்த சாசனங்களை அழியாமல் பாதுகாக்கவும் இல்லை; ஆகவே, அச்சாசனங்கள் அழிந்துவிட்டன; அதனோடு சரித்திரச் செய்திகள் சிலவும் அழிந்துவிட்டன. இது நாட்டுக்குத் துரோகம் செய்தது ஆகாதா? நிற்க.

கலைச் செல்வங்களை அழிக்க முனைவது பேதமையல்லவா ?

கோயிலைப் புதுப்பிக்கிறவர்கள், கோயிலின் தூண்—சுவர் முதலியவைகளில் இருந்த பழைய சிற்ப உருவங்களையும் அழித்துவிடுகிறார்கள்!

பழைய சிற்ப வேலைக்கும்—இக்காலத்துப் புதுப்பிக்கிறவர்களின் சிற்ப வேலைக்கும் பெருத்த வேறுபாடுகள் உண்டு.

பழைய சிற்ப உருவங்களில் கலையழகு காணப்படும்; புதிய சிற்ப வேலைகளில் மட்டமான கலையழகு காணப்படுகிறது; இது, மற்றொரு குறைபாடாகும்.

கோயில் அதிகாரிகள், கோயில்களில் இருக்கும் பழைய தூண்கள், சிற்ப உருவங்கள் முதலிய கற்களை—அவை பின்னப்பட்டு உடைந்துபோன காரணத்தினாலோ அல்லது அவை உதவாதவை என்னும் காரணத்தினாலோ—புறக்கணித்து எறிந்துவிடுகிறார்கள்; இப்படிச் செய்வது பெருந் தவறு.

பின்னம் அடைந்த அல்லது வேண்டியிராத சிற்பங்களை எறிந்துவிடக் கூடாது; அவற்றைப் பொதுமக்கள் பார்க்கத்தக்க இடத்தில் பத்திரப்படுத்த வேண்டும்; அவையும் கலைச் செல்வங்களாகப் போற்றப்பட வேண்டும்.

சிலர் அத்தகைய கற்களைத் தனிப்பட்டவர்களுக்கு விற்றுவிடுகிறார்கள்; இவ்வழக்கத்தையும் அரசாங்கத்தார் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போதைய தமிழன், தன் கலைப் பெருமையை அறியாத தன்மையன். தன் கண்முன்னே நாடெங்கும் காணப்படுகின்ற கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ இக்காலத் தமிழனுக்கு ஆற்றல் இல்லை என்றே கூற வேண்டும். கலைக்கண் இல்லாதபடியால் கலைச் செல்வங்களைக் கண்டு மகிழும் ஆற்றல் இல்லை. அதனோடு நின்றபாடில்லை—கலைச் செல்வங்களை அழிக்கவும் செய்கிறான்! என்னே பேதமை!

நமது நாட்டுக் கலைப் பொருள்கள் மேலைநாடுகளுக்குச் சென்றுவிட்டன !

நமது கலைகளின் மேன்மையையும் சிறப்பையும் அழகையும் நம்மவர் அறிந்திராவிட்டாலும், அயல்நாட்டவராகிய மேல்நாட்டார் நன்குணர்ந்திருக்கிறார்கள்!

அவர்கள் தமது நாட்டுக் கலைகளைப் போற்றுவதோடு, நமது நாட்டுக் கலையையும் போற்றுகிறார்கள்; இதனால், நமது நாட்டுக் கலைப் பொருள்கள் பலப்பல மேல்நாடுகளுக்குச் சென்றுவிட்டன!

அவ்வாறு மேல் நாடு சென்ற நமது நாட்டுக் கலைச் செல்வங்களில், சிற்ப வேலைப்பாட்டு[illegible] சிறந்த கருங்கல் மண்டபமும் ஒன்று! நமது நாட்டு மதுரை மாவட்டத்தில் இருந்த அந்தச் சித்திர மண்டபம், இப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருக்கிறது!

சிந்தித்துப் பாருங்கள்—நமது நாட்டுப் பெரிய கருங்கல் சித்திர மண்டபம், பல்லாயிரம் மைல்களுக்கப்பால் அமெரிக்கா கண்டம் சென்றுவிட்டது!

மதுரைக்கு அருகில் ஒரு பெருமாள் கோயிலில் இருந்த இந்த மண்டபம், பெரிய சிற்ப உருவங்களைக் கொண்டது. தருமன்—அர்ச்சுனன்—பீமன் முதலிய பஞ்ச பாண்டவர் உருவங்களும், நாரதர்—அகஸ்தியர்—பதஞ்சலி முதலியவர்களின் உருவங்களும் ஒவ்வொரு தூணிலும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த மண்டபத்தை, அடிலின் பெப்பர் கிப்ஸன் என்பவர் 1912-ஆம் ஆண்டில் வாங்கிக்கொண்டு போனார். இவர் பாரிஸ் நகரத்தில் இறந்த பிறகு, இவருடைய உறவினர்கள், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த பிலெடெல்பியா நகரத்துக் கலைப் பொருள் காட்சிச்சாலைக்கு 1919-இல் இதனை நன்கொடையாக அளித்தார்கள்.

ஆகவே, இந்த மண்டபம் இப்போது அக்காட்சிச்சாலையில், மண்டபமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்தைப் பற்றி ஒரு நூலையும் அச்சிட்டிருக்கிறார்கள்.

சிற்பக் கலையழகு மண்டபம் பறிபோகாததன் விசித்திரம் !

வேலூர் கோட்டையில் இருக்கிற, மிகச் சிறந்த சித்திர வேலையமைந்த கருங்கல் மண்டபம், சிற்பச் சிலைக்குப் பேர்போனது; இதன் கலையழகைக் கண்டு வியப்படையாதவர் இலர்; இந்த மண்டபத்தை அடியோடு பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் இங்கிலாந்து தேசத்தில் அமைக்க ஆங்கிலேயர் சென்ற நூற்றாண்டில் முயற்சி செய்தார்கள்; ஆனால் நல்ல வேளையாக, இந்த மண்டபத்தைக் கொண்டு போகவந்த கப்பல், கடலில் மூழ்கிவிட்டது; ஆகவே, மண்டபத்தைக் கொண்டுபோகும் முயற்சி கைவிடப்பட்டது.

அந்தக் கப்பல் மூழ்கியிராவிட்டால், வேலூரில் உள்ள இந்த அழகான சிற்பக் கலை மண்டபம், இப்போது இலண்டன் மாநகரத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கும்!

நமது நாட்டிலே இன்னும் ஏராளமான பழைய கோயில் கட்டடங்கள் உள்ளன; அவைகளை அழியவிடாமல் பாதுகாக்க நாம் எல்லோரும் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும்.

அருமை பெருமை அறியாமல் அறவே மறந்ததற்குக் காரணம் ?

சிற்பக் கலையையும் நம்மவர் இக்காலத்தில் போற்றுவதில்லை; சிற்பக் கலையின் பெருமையையும் அழகையும் இனிமையையும் உணராததே இதற்குக் காரணம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

சாசனங்கள் சரித்திரத்தின் ஏடுகள்—

'படி' எடுக்கையில் அவற்றைப் பாழாக்காதீர்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

கோயில்களுக்குத் தர்மகர்த்தராக அல்லது அறநிலைய அதிகாரியாக இருப்பவர்கள், பெரும்பாலும் அழகுக் கலையை உணராதவர்கள்! கலைகளின் சிறப்பையும், அருமைபெருமைகளையும் அறியாதவர்கள்! அவர்களுக்குள்ள கவலையெல்லாம், 'கோயில் பூஜை முதலியவை சரியாக நடக்கின்றனவா' என்பது பற்றியே! 'கோயில்கள், கலைக் கூடங்கள்' என்பதை, அவர்கள் அறவே மறந்துவிட்டார்கள்!

சமய வாழ்க்கையோடு கலைகளையும் இணைத்திருந்தனர் நமது பெரியோர். இக்காலத்தில் இசை அரங்கங்கள் வேருகவும், நாடக மேடைகள் வேருகவும், பொருட்காட்சிசாலைகள் வேருகவும், ஓவியக் கலைக்கூடங்கள் வேருகவும் இருப்பதுபோல், கலைச்சாலைகள் வெவ்வேருக அக்காலத்தில் அமைக்கப்படவில்லை; கோயில்களே கலைக் கூடங்களாகவும், ஓவியக் காட்சிச்சாலைகளாகவும், இசையரங்கங்களாகவும், நாடகமேடைகளாகவும் விளங்கின; அதனுல்தான், சிற்பங்களும் ஓவியப் படங்களும் நமது கோயில்களில் இடம்பெற்றன!

ஒவ்வொரு பெரிய கோயிலிலும் சங்கீத மண்டபங்கள் இருந்தன; அங்கு இசையும், இசைக் கருவிகளும், நர்த்தம்-நாட்டியம் முதலியவைகளும் பண்டைக் காலத்தில் நடைபெற்றன—ஏன்—இலக்கியக் கலைக்கூடமாகவும் கோயில்கள் திகழ்ந்தன!

இவ்வாறு, கோயில்கள் கலைக்கூடங்களாகவும் இருந்தன என்பதை அறியாத இப்போதைய தர்மகர்த்தர்கள்---பெரும்பாலும் கலைச் சுவையும் கலையறிவும் இல்லாதவர்களாகையினுலே --- கோயில்களில் உள்ள கலைப் பொருள்களைக் காப்பாற்றும் ஜோறுப்பும் கவலையும் இல்லாதவர்களாய் அவற்றை அழித்துவிடுகிருர்கள்!

கலையழகு நிரம்பிய சிற்பங்கள் 'கொலை' செய்யப்படுகின்றன!

இராஜசிம்மன் என்னும் பெயருள்ள இரண்டாம் நரசிம்மவர்மனுல் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்ட 'இராஜசிம்மேச்சுரம்' என்னும் கயிலாசநாதர்கோயில், சிற்பக் கலையில் மிகச் சிறந்தது. அந்தச் சிற்பங்கள் கோயில் சுவர்களிலே புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளன; வெயிலிலும் மழையிலும் பல நூற்றுண்டாக இருந்தபடியினுலே, அவற்றில பெரும்பாலன சிதைந்துபோயின; சமீப காலத்திலே அச்சிற்பங்கள் புதுப்பிக்கப்பட்டன.

சிற்பக்கலை உணராத சாதாரண சிற்பிகளாலே அவை புதுப்பிக்கப் பட்டபடியினுலே—புதுப்பிக்கப்பட்ட சிற்பங்கள், பழைய அழகு கெட்டு விகாரமாகக் காணப்படுகின்றன. ஆனுல், புதுப்பிக்கப் படாத பழைய சிற்ப உருவங்கள் இன்றும் அழகுடன் காணப்படுகின்றன!

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சிபுரத்திலே அமைக்கப்பட்ட 'முக்தீசுரம்' என்னும் முக்தீசுவரர் கோயில் முன்மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த புடைப்புச் சிற்ப உருவங்கள் மிகச் சிறந்தவை; அவையும் இப்போது மொத்தை மொத்தையாகச் சுதை பூசப் பெற்றுப் பழைய உருவம் தெரியாதபடி விகாரப்படுத்தப்பட்டுள்ளன! பல்லவர் காலத்துக் கலையழகு நிரம்பிய சிற்ப உருவங்கள் இவ்வாறு 'கொலை' செய்யப்படுகின்றன!

சிதைவுற்ற சிற்ப உருவங்களை அப்புறப்படுத்தி எறிவதா முறை?

நமது கோயில்களிலே இப்போது உள்ள சிற்பக் கலையுருவங்கள் யாவும், கல்லினுலும் பஞ்சலோகத்தினுலும் செய்யப்பட்டவை.

'பின்னம் அடைந்த சிற்ப உருவங்களையும், உடைந்துபோன சிற்ப உருவங்களையும் வழிபடக் கூடாது' என்பது முறை; அதனுலே, பின்னம் அடைந்த சிற்ப உருவங்களைக் கோயில் அதிகாரிகள் அப்புறப்படுத்தி எறிந்துவிடுகிருர்கள்; இது தவறு

வழிபாட்டிற்கு உதவாமற்போனுலும், அவை, 'சிற்பக் கலையுருவங்கள்' என்னும் முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

[..]ணக்கற்ற கற்சிலைகளும் பஞ்சலோகச் சிலைகளும் சிறிது சிதைவுபட்டுவிட்டன என்னும் காரணத்திற்காக அப்புறப்படுத்தப் பட்டு அழிக்கப்படுகின்றன!

பூசைக்கு உதவாத சிற்பக் கலை உருவங்களை எறிந்துவிடாமல் கோயிலின் ஒருபுறத்திலே பாதுகாக்க வேண்டும்.

சிதைந்துபோன சிற்ப உருவங்களை ஒரு மூலையில் போட்டுவிட்டு, அதற்குப் பதிலாகப் புதிய உருவங்களை அமைத்து வழிபடுகிற சில கோயில்களில், நான் கண்ட உண்மை என்னவென்ருல், சிதைந்து போன உருவங்கள் கலையழகு நிரம்பப் பெற்று வெகு அழகாக இருப்பதும், அதைப்போலப் புதிதாக அமைக்கப்பட்ட உருவங்கள் கலையழகு இல்லாமல் இருப்பதும் ஆகும். இந்த உண்மையைக் கோயில் அதிகாரிகள் அறிந்து அவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

சிதைந்துபோன சிற்ப உருவங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் அழித்துவிடக்கூடாது—விற்றுவிடவும் கூடாது!

அவற்றைக் கலையுணர்வு படைத்த பலரும் பார்க்கும்படி பொது இடத்தில் சேமித்து வைக்கவேண்டும்.

பின்னம் அடைந்து சிதைந்துபோன சிற்ப உருவங்களைச் சில இடங்களில் பூமியில் புதைத்துவிடுகிருர்கள்; புதைக்கப்பட்டவை நாளடைவில் மறக்கப்பட்டு மறைந்துவிடுகின்றன!

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மணிமங்கலத்துப் பெருமாள் கோயிலில், மூன்பு இருந்த வராகப் பெருமாள் கற்சிலை--சிறிது சிதைந்துபோன காரணத்திற்காக--அது, அக்கோயில் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல சிற்பங்கள் பூமியில் புதைந்துள்ளன.

சில இடங்களில், பின்னம் அடைந்த சிற்பக்கலை உருவங்களை குளம்—குட்டை—கிணறுகளில் போட்டுவிடுகிருர்கள்; பெரும்பாலும் கற்சிலைகளையே இவ்வாறு செய்கிருர்கள்; ஏரிகளிலும் குளம் குட்டைகளிலும் இவ்வாறு போடப்பட்டுள்ள சிற்ப உருவங்களைக் கண்டிருக்கிறேன்.

நீரிலும் நிலத்திலும் மறைத்து அழித்துவிடுவதைவிட, அச்சிற்ப உருவங்களைக் கிராமத்தின் பொது மண்டபத்திலாவது கோயிலின் ஒரு புறத்திலாவது பாதுகாப்பது அன்ருே கலையைப் போற்றுவதாகும்? இனியேனும் கவனிப்பார்களா?

மறக்கப்பட்டு மறைந்தன— மீட்கப்படாமலும் மறைந்தன!

பொன், வெள்ளி முதலிய விலையுயர்ந்த உலோகங்களினுலே செய்யப்பட்ட சிற்ப உருவங்கள், பொருளாசையுள்ள கள்ளர் முதலியவர்களால் களவாடப்பட்டு அழிக்கப்பட்டு பணமாக்கப்பட்டன!

கி. பி. 9-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்த திருமங்கையாழ்வார் என்னும் வைணவ பக்தர், அக்காலத்தில் நாகப்பட்டினத்துப் பௌத்தக் கோயிலிலிருந்த—தங்கத்தினுல் செய்யப்பட்ட புத்தர் உருவச் சிலையைக் களவாடிக் கொண்டு போய், அந்தப் பொன்னைக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் திருமதில் கட்டுதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்தார்—என்று வைணவ நூல்கள் கூறுகின்றன.

கி. பி. 13-ஆம் நூற்ருண்டில் மாலிக் காபூர் என்னும் சேனைத் தலைவன் டில்லியிலிருந்து தென்னுட்டின்மீது படையெடுத்து வந்தான்; அவன் படையெடுத்து வந்ததன் நோக்கம்—தென்னுட்டுக் கோயில் விக்கிரகங்களை உடைப்பதும், கோயில் செல்வங்களைக் கொள்ளையடிப்பதும் ஆகும்.

அவன், தென்னுட்டில் உள்ள எல்லாப் பெரிய கோயில்களையும் கொள்ளையடித்தான்!

அந்தக் காலத்தில், அவன் கையில் அகப்படாதபடி உற்சவ மூர்த்தங்களான சிற்ப உருவங்களைப் பத்திரப்படுத்துவதற்காக—அவற்றைப் பெட்டி-பேழைகளில் வைத்துப் பூமியில் புதைத்துவிட்டார்கள்; அவ்வாறு புதைக்கப்பட்டவைகளில் சில, மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டன; சில, தோண்டி எடுக்கப்படாமலே மறக்கப்பட்டு மறைந்துவிட்டன! இவ்வாறு மறக்கப்பட்டு மறைந்து போனவைதான், இப்போது பூமியிலிருந்து தற்செயலாகக் கிடைக்கின்ற சிற்ப உருவங்கள்!

இவ்வாறு பூமியிலிருந்து கிடைக்கப்பட்ட சிற்ப உருவங்களில் ஒன்று, திருவாலங்காட்டில் கண்டெடுக்கப்பட்டு இப்போது சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் உள்ள உலகப் புகழ்பெற்ற நடராசர் திருவுருவம்!

நல்லகாலமாகப் பூமியிலிருந்து கிடைத்த இக்கலைச் செல்வம் இலண்டன் மாநகரம், டெல்லி முதலிய நகரங்களில் காட்சிக்காக வைக்கப்பட்டு மீண்டும் சென்னைக்கு வந்திருப்பதை யாவரும் அறிவர்! இதை இலண்டனுக்கு எடுத்துப் போவதற்கு முன்னர், சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் இதற்காக ஈடுகட்டி எடுத்துச் செல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாலிக் காபூர் காலத்தில் மட்டும் அல்லாமல், தென் இந்திய சரித்திரத்தில் மிகக் குழப்ப காலமாக இருந்த கி. பி. 17, 18-ஆம் நூற்ருண்டுகளிலும் (ஐதராலி கலகம், திப்புசுல்தான் கலகம், பாளையக்காரர் கலகம். நவாப்பு காலத்துப் போர்கள், 'கும்பினி'யார் சண்டை முதலியவை), பல சிற்பக் கலையுருவங்கள் நீரிலும் நிலத்திலும் தஞ்சம் புகுந்தன! அவற்றில் பல பிற்காலத்தில் மீட்கப்படாமல் மறைந்துவிட்டன!

களவாடிய நிகழ்ச்சியும் காலத்தால் நடைபெற்றது!

கோயில்களில் ஊழியம் செய்யும் குருக்கள் முதலியோர்களில் சிலர், கோயில் விக்கிரகங்களைக் களவாடி விற்றுவிடுவதும் பண்டைக் காலத்தில் நிகழ்ந்துவந்தது; அவ்வாறு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி ஒன்று தமிழ் நாவலர் சரிதையில் கூறப்படுகிறது.

திருவாரூர் கோயில் குருக்களில் ஒருவராயிருந்த நாகராச நம்பி என்பவர், அறுபத்துமூன்று நாயன்மாருடைய செப்பு விக்கிரகங்களில் இரண்

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தலைவலி, நலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானுல் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானுல், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

சா-3769

(r--13)

கொடுத்துச் சிவந்த செந்தமிழ்!

முத்து

இந்தியாவின் பெருமுறை மன்ற (சுப்ரீம் கோர்ட்) நீதிபதியாக இருந்த மொழிநூற் பேரறிஞர் சர். வில்லியம் ஜோன்ஸ் என்பார், 1784-ல் எழுதி வைத்த சில சிந்தனைப் பொறிகள் இவை :—

“சமஸ்கிருத மொழியின் பழமை எதுவாயினும், அது வியக்கத்தக்க அமைப்புடையது என்பது உண்மை; கிரேக்க மொழியைவிடச் செம்மையான அமைப்புடையது அது; இலத்தின் மொழியைவிடச் செழிப்பானது; ஆனாலும், வினைச் சொற்களின் வேர் வகையாலும், இலக்கண அமைப்பாலும், இலத்தின்—கிரேக்க மொழிகளோடு வியக்கத்தக்க ஒற்றுமையோடு விளங்குகிறது; ‘இது ஏதோ, எதிர்பாராமல் நிகழ்ந்தது’ என்று யாரும் தள்ளிவிட முடியாது; ‘ஒரே மூலத்திலிருந்து கிளைத்துச் செழித்த பல்வேறு மொழிகள் இவை’ என்ற அடிப்படை உணர்வு இல்லாமல், எந்த மொழிநூல் அறிஞரும் இவற்றின் அமைப்பை ஆராய்ந்திட முடியாது; ஆனால், அந்த மொழிமூலம் இன்னமும் வாழ்கிறதா என்பது ஐயப்பாடே......”

மாகவி காளிதாசனின் சமஸ்கிருதச் சாகுந்தலத்தை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சிறப்பான ஆராய்ச்சியும் செய்கையில்தான், சர். வில்லியம் ஜோன்ஸ் இப்படி எழுதியிருக்கிறார்.

1784-ல் மொழிநூல் வல்லாருக்கு இருந்த வசதி வாய்ப்புகளையொட்டி ‘அந்த மொழிமூலம் இன்னம் வாழ்கிறதா?’ என்று அவர் ஐயப்பட்டது இயல்பே; ஆனால், அடுத்தடுத்து நிலமகள் தன் கருவறை திறந்து வெளிப்படுத்திய வரலாற்றுச் சான்றுகள், அந்த மொழிமூலத்தை இனங்காட்டி விட்டன!

ஆம்! உலகத்துச் செம்மொழிகள் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் இலத்தின்—கிரேக்க—சமஸ்கிருத மொழிகளுக்கு மூலமான அந்த மொழி இன்னமும் சீரும் சிறப்போடும் வாழ்கிறது—

அதுவே தமிழ்!

இதைக் கேட்கும்போது, சிலருக்குத் திகைப்பாக இருக்கும்; சிலருக்கு வெறுப்பாகவும் இருக்கலாம்; ‘என்னதான் தமிழை உயர்த்திடத் தோன்றினாலும்.........இப்படியா?’ என்று அலுத்துக் கொள்ளவும் கூடும்!

சற்றே பொறுமையுடன் அவர்கள், தாம் தமிழர் என்பதை எண்ணிக் கொள்ளவேண்டும்; ‘தமிழ், நம் தாய்மொழி’ என்பதில் உறுதியோடு நிற்க வேண்டும்.

விதை போட்டால் செடி விளையும் மண்! இதில், தமிழ் நாடு—ஆந்திரம்—கேரளம்—கருநாடகம் என்பானேன்? நம்மை, ‘வெறும் மனிதர்’ என்று சொல்லிக் கொண்டாலே போதுமே—‘தமிழ்’ என்று பீற்றிக் கொள்வானேன்?

தாய்மொழி, தாய்மொழி என்கிறோமே—அது, பொருளற்ற வெறும் அழகுச் சொல்லன்று! குழந்தையின் இயற்கை வளர்ச்சிக்குத் தாய்ப்பால் போல, நாட்டு மக்களின் வாழ்வையும் வளர்ச்சியையும் இயக்கி, அறிவியற் கலை ஆராய்ச்சிப் பெருக்கங்களுக்கும் மூலமாய் அமைவதுதான் தாய்மொழி!

நம் தமிழ் வெறும் மொழி மட்டுமன்று—ஒரு பழைய மொழி மட்டுமன்று—இயற்கையோடு இயைந்து வளர்ந்த செம்மொழி மட்டுமன்று—அது ஒரு மொழிக் குழுவின் குறியீட்டு மொழி! உலகத்துச் செம்மொழிகளின் மூல மொழி!

ஒரு பொருளைக் குறித்திட, நுணுகிய வேறுபாடுகள் பொதிந்த பல சொற்களைக் கொண்டது நம் தமிழ்தான்!

மூஞ்சி—முகரை—முகம்—என்ற மூன்று சொற்கள் வழக்காற்றில் கிட்டத்தட்ட ஒரே பொருளில் தான் பயன்படுத்தப்பெறுகின்றன!

ஆனால் மூக்கும் வாயும் சேர்ந்தது மூஞ்சி! மூக்கும் வாயும், கன்னமும் சேர்ந்தது முகரை! அவற்றோடு கண்களும் நெற்றி சேர்ந்ததே முகம்!

இந்த நுணுக்கம்தான் மொழிச் சிறப்பு; இது, இயற்கையோடு வளர்ந்த மொழிக்கு மட்டுமே உண்டு. ‘கருத்தை வெளிப்படுத்த வேண்டுமே’ என்பதற்காக, பல மொழிச் சொற்களைக் கடன் வாங்கிக் ‘கதை செய்யும்’ மொழிகளுக்கு இந்தச் சிறப்பு வராது!

தமிழ்ச் சொற்கள், தமிழரின் வளர்ச்சிப் படிகளின் பல தடங்கள்!

இன்று உலக மொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் பயின்றுவரும் ‘கட்டு மரம்’ காண்போம்.

கட்டுமரம் கட்டத் தமிழன் முனையுமுன்னே ஒரு காலம் இருந்தது; அது, குறிஞ்சிக காலம்! ‘அதுதான் மொழிமூலக் காலம்’ என்பார் அறிஞர்!

அந்தக் காலத்திலேதான், உலகத்தின் ஈராயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளில் வழங்கும் சொற்களின் மூல வேர்களைத் தமிழ் மொழி வழங்கியது!

அதற்குப் பின்னர், கட்டுமரம் கட்டிக் கடல்கடந்த காலம்; அது, நெய்தற்காலம்; பின்னால், கட்டையின் நடுவில் குடைந்து வாய் உண்டாக்கி நாவாய் அமைத்தனர்; செம்மைப்படுத்தப்பட்ட நாவாய்தான் செம்படவு; அந்தச் செம்படவைப் பயன்படுத்திக் கடல் வளத்தை அளந்தவரே செம்படவர்!

கடல்கடக்கக் கற்ற முதல் இனமே தமிழினம் தான்! கடல் கடந்து அவர்கள் சென்றதுதான் தமிழ் மொழியின் வேர்ச் சொற்களை உலகுக்கு வழங்கக் காரணமாய் அமைந்தது!

உலகத்தின் மூலை முடுக்கில் எல்லாம் அகழ்ந்து காணப்படும் சான்றுகளில் எல்லாம் தமிழர் வாழ்வின் தடங்கள் தெரிவதும், உலகத்து மொழிகளின் சொல் வேர்கள் எல்லாம் தமிழாகவே இருப்பதும் அதனாலேதான்!

கடல் வழியே தமிழ் மண்ணிலிருந்து புறப்பட்டவர்கள், அரேபியா, எத்தியோப்பியா, எகிப்து, சுமேரியா, கிரேக்கம், ரோமாபுரி ஆகிய இடங்கள் வழியே இன்றைய ஜிப்ரால்டர் நீர்ச்சந்திவரை சென்றார்கள் என்பதற்குச் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன.

விருப்பு—வெறுப்பின்றி இந்தச் சான்றுகளை ஆராய்கிறவர்கள், ‘இவை, தமிழர் பயணத் தொடர்பின் தடங்களே’ என்று ஒப்புகின்றனர். ஆனால் ஒரு சார்புக் கொள்கையுடைய ஒரு சிலரே முரண்படுகிறார்கள்!

‘நாவாய்’ என்ற தமிழ்ச் சொல்லோடு, ‘நேவி’ (Navy) என்ற ஆங்கிலச் சொல்லைப் பொருத்திப் பாருங்கள்; தமிழ்ப் ‘பாதை’யோடு ஆங்கில ‘பாத்தை’ (Path) இணைத்துப் பாருங்கள்; பெரும்பாலான ஆங்கிலச் சொற்களின்மூலம் இலத்தீனாக—கிரேக்கமாக இருக்கிறது. ‘இலத்தீனிலும் இன்றைய இலத்தீனாக இல்லாமல், பழைய இலத்தீனாக (Low Latin) இருக்கிறது’ என்று மொழி அறிஞர் கூறுகின்றனர்.

தமிழகத்தின் பாலை நிலங்களிலிருந்து சென்றவர்கள், ஐரோப்பியக் கண்டத்தின் காஸ்பியன்—ஊரல் மலைப் பகுதிகளில் குடியேறித் தங்கியிருந்தவரையில், தங்கள் பாலை நிலைப் பெயரான சிலாவர் என்பதையே கொண்டிருந்தார்கள்; அதுவே இன்றைய பல்கேரிய இனத்தின் மூலமான ஸ்லாவ் இனமாகும்.

உருத் தெரியாமல் கிடந்த ஸ்லாவ், பல்கேரியா நாடு தனியாட்சிபெற்ற பின்னர் புத்துணர்ச்சி பெற்று—ஸ்லாவ் மொழிக்கு எழுத்து கண்டு—இலக்கியம் படைக்கத் தொடங்கிவிட்டது!

அதேபோல், தமிழகத்தின் முல்லை நிலங்களிலிருந்து சென்றவர்கள் ஒரே இடத்தில் குடியேறிடாமல், பல பிரிவுகளாகிக் குடியேறினர்கள்; அவர்கள்தான் இன்றைய இந்தோ—ஐரோப்பிய மக்களின் மூல மரபினர்!

முல்லை நிலம் காடும்—காடு சார்ந்த நிலமும் ஆகும்.

அன்றைய சமுதாயத்தின் செல்வம், மாடு; ‘மாடு’ என்றாலே, ‘செல்வம்’ என்றொரு பொருளும் உண்டு; அந்தச் செல்வத்தைக் கட்டிக் காத்திடும் ‘கோன்’ அமைப்பு முறை அங்கேதான் தொடங்கியதென்று மக்கள் இனங்கள்—தொல் மரபுகளை ஆராய்வோர் ஒப்புகிறார்கள்.

முல்லை நிலத்துக் காவலனான ‘கோன்’—தமிழ் மண்ணில் ஒரு சாதிக்காரரான கோனார் ஆகிவிட்டார்! ஆனால் அந்தக் கோன்தான் ஐரோப்பிய மொழியாளருக்கு மன்னன் ஆனான்!

ஐஸ்லாந்து	—	கோனுங்கர்	(KON-UNGR)
டச்சு மொழி	—	கோனிங்	(KON-ING)
டேனிஷ்	—	கோன்கே	(KON-GE)
ஜெர்மன்	—	கோனிக்	(KON-IG)
ஆங்கிலம்	—	கிங்	(KING)

இவை மட்டுமல்ல—

ஐஸ்லாந்து	அரசி	—	கோனா	(KONA)
டேனிஷ்	அரசி	—	கோனே	(KONE)
ஆங்கில	அரசி	—	குவீன்	(QUEEN)

இவற்றோடு நிற்கவில்லை அந்தச் சிறப்பு; இயற்கையின் வெம்மை தண்மைகளைத் தாங்க அந்தக் ‘கோன்’ தலையில் கட்டிய பாகைதான் மன்னன் முடியென்றும், அவனது கைக்கோல்தான் செங்கோல் என்றும் ஆனதாகச் சொல்கிறார்கள்!

இசி கப்புத்துரு என்ற கப்பு (கிளை) இழுக்கும் துறட்டுக்கோல்தான், ‘sceptre’ என்று ஆயிற்றென்பர்—மொழி நூல் வல்லார். தனி மனிதரின் தலைப்பாகையினின்றும் வேறுபடுத்திக் காட்ட அழகிய மணிப் பொருள்கள் கோர்த்துச் செய்யப்பட்ட முடியை, கோர்-ஒ-னா ‘cor-o-na’ என்ற முல்லைக்கால மக்கள் வழங்கி—அதே வழக்கோடு வெளிநாடுகளில் தங்கிவிட்ட பிறகு, ‘crown’ என ஆனதென்றும் கூறுவர்.

ஜான் பிலிப் பெப்ரீஷியஸ், ந. கதிர்வேற்பிள்ளை போன்ற அறிஞர்களின் ஆராய்ச்சிப்படி, பல நூறாயிரம் ஆண்டுகளின் முன்னே தமிழர் அப்படிச் சென்றிருக்கிறார்கள்!

(crete) கிரேதாவின் தாதலஸ், வீயின்கை (vienge) கட்டிக்கொண்டு வான்வெளிப் பயணத்துக்கு முயன்றதாக வரலாறு.

தமிழில், ‘வீ’ என்றால் பறவை; ஆக, பறவையின் கைபோன்ற இறக்கையைக் கட்டிக்கொண்டு பறக்க முயன்றான்!

கிரேதாவின் இந்தக் குறிப்பில் உள்ள தமிழ்ப் பெயர்தான், பின்னாளில், ‘விங்’ (Wing) என்று ஆயிற்று என்பர்.

சுவையாக இருக்கவேண்டுமென்பதற்காகச் சில சொற்களை மட்டுமே இந்தக் கட்டுரையில் காட்டமுடிகிறது. உலக மொழிகளுக்குத் தமிழ் வழங்கியிருக்கும் வேர்ச் சொற்கள், வழக்கொழிந்துபோன பல்லாயிரம் தமிழ்ச் சொற்களாகவே உள்ளமை, ஆர அமரப் படிப்போர்க்கே புரியும்!

“தமிழ் வழங்கிய வினை—வேர்களைப் பல வகையில் பூத்திடச் செய்வதே ‘வேர்பூ’ (Verb)-வெர்ப் என்ற ஆங்கிலச் சொல்” என[...] துணிந்து சொல்கின்றனர்—சில அறிஞர்கள்.

Verb வினைச் சொல் மட்டுமன்று; ஏனென்றால், Verbal—Verbarian-Verbatim போன்ற சொற்கள், சொற்களை ஒட்டியே பயன்படுத்தப்படுகின்றன.

அதிலும், ‘Verbarian’ என்ற சொல்லுக்கு, ‘சொற்களை உருவாக்குகிறவன்’ என்பதே அகராதிப் பொருள்; ஆகவே, வினை வேர்களை மலரச்செய்து சொற்களை ஆக்குகிறவனே Verbarian!

கொஞ்ச காலத்துக்கு இந்த வாதங்கள் புறக்கணிக்கப் பெறலாம். கடற்கரைக் கூட்டத்தில்—தமிழ் மாநாட்டுத் தலைமையுரையில்—‘தமிழே இணைப்பு மொழியாகும்; அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், வருமுன் சொன்ன தீர்க்கதரிசனம் இன்றைக்கு எப்படியோ தோன்றினாலும் அதுதான் உண்மை! அதுதான் நடக்கப் போகிறது!

அதுபோலவேதான், ‘தமிழ்தான் உலக மொழிகளுக்கு வேர்ச் சொற்களை வழங்கிய மொழி’ என்பதும்—இன்று எப்படியோ இருந்தாலும்—உலகம் ஒப்பும் நாள் வெகு விரைவில் வர இருக்கிறது!

‘கொடுத்துச் சிவந்தன வள்ளலின் கைகள்’ என்பார்கள்; அதுபோல், உலக மொழிகளுக்கு விதையும் உரமும் கொடுத்துச் சிவந்தது தமிழ்! அதனாலேதான், தமிழை, ‘செந்தமிழ்’ என்று சொன்னார்கள் போலும்!

அதன் விளைவுதான் இது!

‘இதென்ன தமிழ்—பல் உடைபடுகிறதே’ என்று சே[...] செந்தமிழைப் பண்டிதர்களின் தனியுடைமை[...] விட்ட பாமர மக்களுக்குத் தமிழின் சிறப்பு அறிவ[...] முயற்சியே உலகத் தமிழ் மாநாடு!

“எட்டுத் திக்கிருந்தும் 40 நாட்டு அறிஞர் 450 [...] வந்தார்கள்; ‘பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கூடினார்கள்; ஏதோ பேசினார்கள்—கலைந்தார்கள்’ என்று மட்டுமே சொல்லத்தக்க அளவில் நடந்துமுடிந்திருக்க வேண்டிய கருத்தரங்கை, 10 இலட்சம் மக்கள் திரண்டு நின்று கூர்ந்து நோக்கச் செய்திருக்கிறது—தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கும் தீவுத் திடல் மாநாடு! தேங்கிக்கிடக்கும் தமிழுணர்ச்சியின் வெளிப்பாடு இந்த மாநாடு!

பண்டிதர் தமிழுக்கும்—பாமரர் தமிழுக்கும் ஓர் இணைப்புப் பாலம் இந்த மாநாடு!

வளமனைகளில் மட்டுமே அடைபட்டுக் கிடந்த அரசியலை அன்றாடங்காய்ச்சிகள் எட்டிப் பிடிக்க வகைசெய்த அறிஞர் அண்ணா அல்லவா முதலமைச்சர்! அதன் விளைவுதான் இது!

காது 60 இல்லையே!

சென்னை, சன. 4—

நேற்றிரவு, தமிழ் மாநாட்டுத் துவக்கவிழாவின் இறுதியில், அறுபது நாதசுரக் கலைஞர்கள் சேர்ந்து அமர்ந்து ஒரே தொனியில் சுருதி கூடாமல் குறையாமல் இசை முழக்கமிட்ட நிகழ்ச்சி, என்றும்—எங்கும் நடந்திராத புதுமையாகும்!

அறுபதுபேருக்கும் அறுபதுபேர் தவில் வாசிக்க—அறுபது பேர் சுதிப்பெட்டி வாசிக்க—அறுபது இளைஞர்கள் ‘தாளம்’ எண்ணிப்போட—இந்த அதிசயக் காட்சியை அயல்நாட்டுக்காரர் ஒருவர் படமெடுக்க—மற்றோர் அயல்நாட்டுக்காரர் ‘டேப் ரிக்கார்டர்’ மூலம் ஒலிப்பதிவு செய்ய—இத்தனையையும் கண்டும் கேட்டும் திளைத்தனர், கூடியிருந்த மக்கள்!

“இந்த அருமையான நாத முழக்கத்தைக் கேட்க நமக்குக் காது அறுபது வேண்டும்” என ஏங்கியதுபோல் ஒவ்வொருவடைய முகமும் காட்சியளித்தது!

அண்ணா அறிவி[...]
காமராசர் திகைப்பு[...]

சென்னை, சன. 4

நேற்று தமிழ் மாநாட்டுத் துவக்[...] விழா மேடையில், அனைத்தி[...] நியக் காங்கிரசுத் தலை[...] திரு. காமராசரும் [...] அமர்ந்திருந்தார்.

நிகழ்ச்சி நிரலில் உள்ளப[...] நிகழ்ச்சிகள் நடந்துகொ[...] டிருந்தன; அமைச்சர்க[...] நெடுஞ்செழியனும் சத்தி[...] வாணிமுத்தும் வரவேற்பு[...] யாற்றியதும் விழாவுக்குத் [...] தலைமைவகித்திருந்த மு[...] லமைச்சர் அண்ணா அவர்க[...] திடீரென்று எழுந்து, ‘அகில[...] இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசரும் வரவேற்று[...] பேசுவார்’ என அறிவித்தார்[...]

இந்தத் திடீ[...] கேட்ட [...] அறிவிப்பை[...] கூட்டத்தின[...] கைதட்டி ஆர[...] தனர்!

காமராசரும், சற்றும் [...] பாராத இந்த அறிவி[...] கேட்டுத் திகைத்து, [...] டுச் சிரித்தவாறு ஒலிபெருக்[...] முன் பேச வந்தடைந்தார்!

தமிழ்கூறு நல்லுலகம்!

★ [இரா. செழியன், எம்.ஏ., எம்.பி.] ★

தமிழ் கூறு நல்லுலகம் சென்னையில் திரண்டுள்ளது! தமிழறிந்த பெரியோர்—தமிழாராய்ந்த வித்தகர்கள்—சென்னைத் திருநகருக்கு வந்துள்ளனர்!

தமிழகம் பெருமிதம் கொள்ள—தமிழ் மக்கள் பூரிப்படைய—சென்னை நகரம் விழாக் கோலம் கொள்ள—வையம் ஆண்ட வண்டமிழுக்குப் பத்து நாள் திருவிழா எடுக்கப்படுகிறது!

பூம்புகார் எழுந்துள்ளது! நாளங்காடியில் மக்கள் கூட்டம் நிறைந்துள்ளது! அல்லங்காடியில் அரும் பொருள்கள் குவிக்கப்பட்டுள்ளன! பட்டி மன்றம் பாங்குற அமைந்துள்ளது! குழலினும் யாழினும் குரன்முதல் ஏழும், வழிவின்று இசைத்து வழித்திறம் காட்டும் இசையாளர்களின் செவியமுதைப் பெறலாம்!

கடலில் ஆழ்ந்த பூம்புகார் எழுந்தது மட்டுமல்ல—காலத்தில் ஆழ்ந்த -- அதேபோழ்து கருத்தில் ஆழ்ந்த பெரும் புலவர்களும் நமது முன் வந்துள்ளனர்!

ஒப்புதும் மிக்கதுமின்ற உயர் தனிப் பெருநூலாம் குறள் தந்த வள்ளுவர் வந்துள்ளார்!

கோல் தாங்கி---தமிழ்ச் சொல் தந்து---செங்கோல் மன்னர் பலரையும் இடித்துரைத்த தமிழ் மூதாட்டியார் ஔவையார் வந்துள்ளார்!

காவியப் புலவர் கம்பர் கையில் ஏட்டுடன் வந்து நிற்கிறர்!

காற் சிலம்பைக் கையிலே எடுத்து---கடுஞ் சினம் கண்களில் கொப்பளிக்க---சீறி எழுந்த வேங்கையென, பாண்டியன்முன் வழக்குரைத்த கற்பின் கொடி கண்ணகி மீண்டும் காட்சி தருகிறள்!

கடல் கடந்து வந்தனர்---வந்த இடத்தில், தமிழ்க் கடலில் ஆழ்ந்தனர்---கடலில் ஆழ்ந்து, ஒளி முத்துக்களை வெளிக் கொண்டு வந்து உலகின் கவனத்துக்கு வைத்தனர்---என்னும்படி உழைத்த பெரியவர்களான போப்பும், கால்டுவெல்லும், வீரமாமுனிவரும் காட்சி தருகின்றனர்!

[illegible]லோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனரும், தமிழ்க் கடலில் [illegible]டுதலைக் கொடி பறக்கும் கவிதைக் கப்பலை விட்ட பாரதியாரும், 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று முழங்கிய புரட்சிக் கவி பாரதிதாசனும் வந்துள்ளனர்---தாங்கள் கண்ட கனவு பலித்ததைக் காண!

கவிகள் கண்ட கனவு பலிக்கிறது என்றல், அது ஒரு நாட்டின் வரலாற்றில் முக்கிய திருநாளாகும்!

கனவு ஓர் உயர் கருத்து! மனத் திரையில் எண்ணத் தூரிகையால் தீட்டிக்கொள்ளப்படும் ஓவியம்! 'நம்மால் முடியாதே' என்று உதறித் தள்ளவும் முடியாமல்---ஊர றியச் செய்யும் ஆற்றலும் இல்லாமல்---உள்ளப் பெட்டியில் வைத்துப் பூட்டப்படும் திட்டம்!

அந்தக் கனவு நனவாகும் காலம்—உள்ளத் திரையின் ஓவியம் நாட்டில் நடமாடும் காட்சியாக மாறும் நன்னுள்—மனதில் மறைந்துகிடந்த திட்டம் நாட்டில், நாடாளும் ஆட்சியில் ஏற்று நிறைவேற்றப்படும் கட்டம்!

"உலகத் தமிழர்களை ஒன்று சேர்த்துக் காணவேண்டும்; தமிழ் அறிந்தவர்களை ஒன்று கூட்டவேண்டும்; தமிழராய்ச்சி தங்கு தடையின்றி நிறைவேற நிலையான அடிப்படை அமைய வேண்டும்" என்று பலரது உள்ளத்தில் இருந்த அவா, சென்னையில் உருப் பெற்றுள்ளது!

தமிழ் கற்றேர்—தமிழின் பெருமையினை உணர்ந்தோர்—சென்னைத் திருநகருக்கு வந்துள்ளனர்!

பூம்புகாரில் வாழ்ந்த தமிழ், சென்னைக் கடற்கரைப் பக்கம் வந்துள்ளது!

பத்து நாள் விழாக் கொண்டாடப்படுகிறது!

பத்துச் சிலைகள்—பெரும் புலவர்கள் பதின்மருக்குச் சிலைகள்—வைக்கப்படுகின்றன!

சொல்லில் கலை தந்த செம்மல்களுக்கு, கல்லில் சிலை வடித்துள்ளோம்!

தமிழ்க் கடலில் திளைத்தவர்களுக்குச் சென்னைக் கடலோரத்தில் இடம் தந்துள்ளோம்! நமது உள்ளத்தில் உயர் இடத்தை அடைந்தவர்களுக்கு, பளிங்கினல் உயர் மேடைகளை அமைத்து வாழ்த்தியுள்ளோம்!

அவர்கள், தமிழை வளர்த்தனர்---நம்மை வளர்த்தனர்!

தமிழுக்கு அவர்கள் பெருமை கொண்டுவந்தனர்! தமிழால்—தமிழ் வளர்த்த அந்தப் பெரியவர்களால்—நாம் பெருமை பெற்றேம்!

தமிழறிந்த அவர்கள், உலகையும் அறிந்து வைத்தனர்! தமிழ் [illegible]யும் தமிழர் நாகரிகமும் உலக முழுவதும் பரவச் செய்தனர்!

தமிழர்—தமது தளரா முயற்சியால்—அலைகடலைத் தாண்டி [illegible]வனம் அடைந்தனர்! ரோமாபுரியில் உலவினர்! சீனம் சென்றனர்! சிங்களம் சேர்ந்தனர்!

[illegible]ழகத்தில் அவர்தம் கப்பற்படை தெரிந்தது! சாவகத்தில் அவர்[illegible]ம் கொடி பறந்தது! கடாரத்தில் அவர்தம் கொத்தளம் அமைந்தது! காம்போஜத்தில் அவர்தம் கோட்டை உருப்பெற்றது!

சேர நாட்டு யானைகள்—கங்கையாற்றை அலைக்கழித்தன! சோழனின் கொடி—இமயத்தின் உச்சியில் பறந்தது! பாண்டியனின் அம்புகள்—கடல் கடந்தும் சென்றன!

அவர்கள்முன் கடலும் பணிந்தது—இமயமும் குனிந்தது—ஆறும் நின்றது—காடும் வழிவிட்டது!

நற்றமிழின் பெருமையும், தமிழரின் ஆற்றலும், நாற்றிசையும் பரவின!

தமிழகத்திலிருந்து கலையும் கருத்தும் ஆற்றலும் ஆர்வமும் உலகின் பல பகுதிகளுக்கும், அன்று சென்றன! இன்று, உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஆராய்ச்சியும் ஆர்வமும் தமிழகம் நோக்கி வந்துள்ளன!

தமிழகத்திலிருந்து கிளம்பிய ஒளிக் கதிர்கள் வெளிநாடுகளுக்குப் பரவின! இன்று வெளிநாட்டினர், தம்மாலியன்ற அளவு சிறு சிறு விளக்குகளை ஏந்திவந்து, தமது காணிக்கையாக இங்கு ஒளியூட்ட முன்வந்துள்ளனர்! இது ஒரு குறிப்பிடத்தக்க மாறுதலாகும்!

தமிழின் தொன்மை பற்றியும், அதன் தனித் தன்மை பற்றியும் வெளிநாடுகளில் ஒரு விழிப்புணர்ச்சியும், ஆராய்ச்சி ஆர்வமும் இன்று ஏற்பட்டுள்ளது!

'கீழ்த் திசை ஆராய்ச்சி' என்று துவங்குவதில், இந்தியப் பகுதி என்பது வட இந்திய ஆராய்ச்சியுடன் இதுகாறும் நின்றுவிட்டது; அந்தப் போக்கு மாறி, 'இந்தியாவின் கலை—பண்பாடு ஆகியவை பற்றிய ஆராய்ச்சி கங்கைக் கரையிலிருந்து துவங்காமல், காவிரிக் கரையிலிருந்து துவங்குதல் வேண்டும்' என்ற உணர்வு, வெளிநாட்டு மொழி ஆராய்ச்சியாளர்க்கு இன்று உண்டாகியுள்ளது!

'கூடினர்—பேசினர்—கலைந்தனர்' என்ற அளவில் இல்லாமல், திட்டமிட்டு நிலையான ஆராய்ச்சித் தொடர்பையும், இப்பொழுது உண்டாக்கியுள்ளனர்! அத்துடன், 'தமிழியல்' என்று ஒரு புது ஆராய்ச்சிப் பகுதியும் தோன்றியுள்ளது!

தமிழ் உணர்ச்சியின் தலைவராக—தமிழக மறுமலர்ச்சியின் தூதுவராக விளங்கிடும் அறிஞர் அண்ணு அவர்களும், அவர்தம் தலைமையின்கீழ் இயங்கிடும் தமிழக அமைச்சரவையும் தமிழரசும், உலகத் தமிழ் மாநாட்டை விழா அளவில் மட்டும் வைத்துக் கொள்ளாமல் – கோலாகலமான காட்சிகளுடன் நிறுத்திக் கொள்ளாமல் – நிலையான ஆராய்ச்சி அமைப்புக்களை உண்டாக்கியுள்ளனர்! சென்னை, அண்ணுமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சிப் பகுதிகளை உண்டாக்க நிதி தந்துள்ளனர்!

தமிழ் உணர்வும், 'தாய்மொழிக்கு உரிய இடத்தைப் பெற்றுக வேண்டும்' என்ற ஆர்வமும் பெருகியுள்ள காலத்தில், உலகத் தமிழ் மாநாடு, நமது நாட்டில் கூடியுள்ளது!

தமிழின் பெருமையை, தமிழ் கற்ற வெளிநாட்டார் நமக்குக் கூறுகின்றனர்; அதன் சொல் வளத்தை—கருத்து வளத்தை—இலக்கியச் செல்வங்களைப் பற்றி வியந்து வியந்து பாராட்டுகின்றனர்! அத்தகைய அருமை பெருமைகளையும் பாராட்டுதல்களையும் கேட்கக் கேட்க, 'இத்தகைய ஏற்றமிகு தமிழுக்கு நாம் ஏற்றவர்கள்தானு' என்ற கேள்வியை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது!

தமிழகத்தின் பெருமை வரலாற்றில் புதைந்து கிடக்கிறது! தமிழ் நாட்டுக் கப்பல்கள் யவனம் சென்றதும், தமிழ்நாட்டு வணிகர்கள் ரோம் நாட்டில் உலவியதும், தமிழ்நாட்டுத் தூதர்கள் சீனம் சென்றதும்—சாவகம் அடைந்ததும், தமிழ்நாட்டு வீரர்கள் கங்கையைக் கொண்டதும்—கடாரத்தை வென்றதும், இன்று, கடந்தகால நிகழ்ச்சிகளாகிவிட்டன! மாடங்கள் கூடங்கள் ஓங்கிட—பொன்னும் முத்தும் ஒளிவிட—இசையும் கூத்தும் முழங்கிட—தலைநிமிர்ந்த தமிழர் வாழ்ந்த நாட்கள் வரலாற்றுக் காலத்தில் கலந்துவிட்டன!

மாட மதுரையும், பீடார் உறந்தையும், கரிகெழு வஞ்சியும், 'ஒலி புனற் புகார்' என்று ஏற்றிக் கூறப்பட்ட நகரங்களும் மாறுபட்டுவிட்டன---மறைந்துவிட்டன!

'வஞ்சி நகரம்' எது என்பதுபற்றிய ஆராய்ச்சி இன்னமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; புகார் நகரம், கடலில் புதைந்து கிடக்கிறது! மதுரையும் உறந்தையும், பழைய பெயர்களை மட்டும் காப்பாற்றிக்கொண்டுள்ளன!

பேரரசுகள் மறைந்துவிட்டன! கோட்டை கொத்தளங்கள் சிதைந்துவிட்டன! கலங்கள் மொய்த்துக்கொண்டிருந்த கடலோரப் பட்டினங்கள் மண்மேடுகளாகக் காட்சியளிக்கின்றன! நாட்டின் மண்ணளவே சுருங்கிவிட்டது! வரலாற்றுப் பெருமை குறைந்துவிட்டது! தமிழனுக்கு மிஞ்சியிருக்கும் ஒரே செல்வம் தமிழ்தான்! அந்தச் செல்வத்தையும் இழந்துவிட—ஒதுக்கிவிட—அவன் மறுக்கிறன்!

> **"எந்தக் காலத்திலாவது — எந்த நோக்குடனுவது — எப்படிப்பட்டவர்களிடமிருந்தாவது தமிழ் மொழிக்குரிய மதிப்பு, உரிமை தரப்படவில்லையென்றல், தமிழகம் பொறுத்துக் கொள்ளாது"**

என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறியது, தமிழர்களின் உறுதியைத் தெரிவிப்பது மட்டுமல்ல – தமிழரின் உணர்ச்சியையும் உறுதியையும் மதிக்க மறுப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகும்!

இதுவே அண்ணு வழி!

★

"தமிழன் யாருக்கு[illegible] – யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் -- எவராலும் சுரண்டப்படாமல், யாருக்கும் எசமானனுக இல்லாமல் -- உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழவேண்டும்; என்பதே எங்களது தலையாய கொள்கை."

—அறிஞர் அண்ணு

புதுமரபின் அடிக்கால்! நாற்கோடித் தமிழ்க் குலத்தின் நலந்தேடி! தமிழ்க்குன்றின் திருவிளக்கு! பதினெட்டு மாநிலத்துள் பண்புக்கு வழிகாட்டி! இந்தி வெறி தேய்க்கின்ற காவலர் அண்ணு!

மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

கோட்டை
சென்னை-9
30--12--1967

அன்புடையீர்,

நடைபெற இருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டினையொட்டி 'நம் நாடு' நாளிதழ் மலர் ஒன்று வெளியிட இருப்பதறிந்து அகமகிழ்கிறேன்.

பண்டையத் தமிழகத்தின் சிறப்பு, கலை, கலாச்சாரம், நாகரீகம், த[illegible]ராட்சி[illegible] மாட்சி ஆகியனவற்றை நினைவுகூர்ந்து எதிர்காலத் தமிழகத்தினை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதை விளக்கும் வகையில் மாநாடு நடைபெற இருப்பதும், அவற்றினை வெளி உலகுக்குக் காட்டும் கருத்துக் கண்ணுடியாக மலர் விளங்கவும் எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

கலாச்சாரத்தின் களஞ்சியம் தமிழ்

[குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன்]

நம்முடைய மொழிகளிடை தமிழ், மாண்புமிக்கதொரு இடத்தை வகிக்கிறது! வடக்கிற்கும்–தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை அது இணைத்திருக்கிறது! நம்முடைய நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஓர் அனைத்து நாட்டு மொழியாகவே இருக்கிறது.

தென் கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஓர் களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது!

தமிழ் நாட்டின் எல்லைகள் பழமையானவை; நில எல்லைகளையும், கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் அது பெற்றிருந்தது!

தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ் நாடு பரவியிருந்தது! வடக்கில் இமயத்தையும் கிழக்கிலும், மேற்கிலும் திரை கடல்களையும்—அந்தக் கடல்களுக்கு அப்பாலுள்ள நிலங்களையும் அது கண்டது!

தமிழர்கள் – அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகியவைகளுடன் வர்த்தகம் நடத்தினர்கள்; வலிமைமிக்க வர்த்தகச் சங்கங்களின் பெயர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன!

மதிப்பரிய வர்த்தகப் பண்டங்களுடன் கப்பல்கள் தங்கிய பல்லவர்களின் மாமல்லபுரம் துறைமுகத்தைப் பற்றிய வர்ணனை, ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டிற்கும் -- தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குமிடையே செழிப்பான வர்த்தகம் நடைபெற்றது பற்றி சுமத்ராவில் கண்டெடுக்கப்பட்ட 11-வது நூற்றுண்டு தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது!

தமிழ் மன்னர்களின் கடற்படை, இந்து மகா சமுத்திரத்தை ஆண்டுவந்தது.

புகழ்மிக்க கடற் படையைப் பெற்றிருந்த இராசேந்திர சோழன், சீனப் பேரரசருடன் அரசியல் வர்த்தகத் தொடர்புகொண்டிருந்தான்.

மேற்றிசை நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வதற்காகப் பல நூற்றுண்டுகளுக்குமுன் பாண்டிய மன்னன் ஒருவன், அகஸ்தஸ், என்னும் ரோமாபுரிப் பேரரசருக்குத் தூதுவர் ஒருவரை அனுப்பியிருக்கிறன்.

அதேசமயத்தில், கற்புத் தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டுவதற்காகச் சேர மன்னன் ஒருவன், இமயமலையிலிருந்து கல் கொணர்ந்து ---கங்கையில் நீராட்டி---அத்தெய்வத்திற்குச் சிலை அமைத்த வரலாற்றையும் நாம் அறிவோம்.

தமிழ் மொழிப் பண்பாட்டைப்பற்றி அதிகமாக நான் கூற முடியாது. அனைவருக்கும் தெரிந்தவற்றை நான் மீண்டும் கூறினல் அது ஒரு மாபெரும் மரபிற்குச் செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு, சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கியவை எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது! செழித்த பண்பட்ட இந்த இலக்கியம், பல நூற்றுண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது!

உலக அறிவின் புனிதக் களஞ்சியமாக விளங்குகிறது குறள்!

வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்ப இராமாயணம், ஒரு மாபெரும் காவியமாகும்; உலகின் மிகவும் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புக்களில் ஒன்றுக இது திகழ்கிறது.

அதேபோன்று, தற்கால இலக்கியமும் செழிப்புற்று விளங்குகிறது! கவிஞர்கள்---கதாசிரியர்களின் பட்டியலில் சுப்பிரமணிய பாரதியின் பெயர் குறிப்பிடத்தக்கது; நமது நாட்டு விடுதலைப் போராட்டக் கவியான அவர், புதியதோர் சுதந்தர சகாப்தத்தை முன்னரே அறிவிக்கக்கூடிய அறிவைப் பெற்றிருந்தார்.

தமிழ் மரபு பழைமையானது மட்டுமின்றி, பரந்த உணர்வையும் பெற்றிருந்தது!

தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்றிருப்பதால், அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம்!

சம்ஸ்கிருத மொழிக்குப் பாணினி செய்துள்ளதைப் போன்று, தமிழுக்கும் தொல்காப்பிய ஆசிரியர், திட்டமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறர்!

வேறு மொழிகளை அறிந்து தங்களுடைய அறிவாற்றலைப் பல்வேறு விதங்களில், வெளிக்காட்டுவதற்கு தமிழர்கள் பேரார்வம் கொண்டிருந்தார்கள்

நிறுவனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித் திறனைப் பெற்றிருக்கின்றனர்! சுகாதார அமைப்புகளைப்பற்றி நாம் இங்கு குறிப்பிடவில்லை: 'உயர் கல்விக்கான பள்ளிகளும், நிறுவனங்களும் இங்கு இருந்தன' என்று தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள்மூலம் நாம் அறிகிறேம்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது; ஏனெனில், கோயில் பூசைக்குரிய இடம் மட்டுமன்றி ஒரு கல்வி போதனைக்கான இடமும் ஆகும். இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான ஔவை கூறியிருக்[illegible]கிறர்.

இலக்கியம், கலை, மதம், சமூக உறவுகள் [illegible]லிய கலாச்சார வாழ்க்கைக்கான எல்லா அ[illegible]சங்களையும் உருவாக்கி ஊக்குவிப்பதில் ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கிவந்தது; மக்கள் தொகை அதிகமுள்ள பெரிய பட்டணங்களில் இவ்வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது.

'கடிகா' அல்லது பல்கலைக்கழகம் பெருமதிப்புடன் விளங்கியது மட்டுமின்றி, அரசியல் துறையில் செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும் நாம் அறிகிறேம்.

உதாரணமாக, அரச வாரிசு இல்லாமல் இருந்த போது இரண்டாவது நந்திவர்மனை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதில் காஞ்சீபுரத்திலிருந்த பல்கலைக்கழகம் முக்கிய பங்கு ஆற்றியது.

மதம், சரித்திரம் ஆகியவற்றை நேரடியாகப் போதிக்கும் ஒரு நிறுவனமாகவும் ஆலயம் இருந்தது.

காஞ்சீபுரத்தில் வைகுந்நாத பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் சரித்திரத்தைத் தெளிவுடன் விளக்குகின்றன என்பதையும், தஞ்சாவூரில் இராசராசேசுவர ஆலயத்திலுள்ள ஓவியங்கள் புகழ் பெற்ற இராசராசனின் சாதனைகளைச் சித்தரிக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

பலவகைப்பட்டதும், மிகச் சிறப்புகளுடன் கூடியதுமான கருத்தை ஈர்க்கும் தமிழர்களின் படைப்புகளைப் பற்றித் தனி நிபுணத்துவம் பெற்றிராத நான்கூட ஒரு சமயம், பேசிக்களித்து, காலத்தையே மறந்திருக்க முடிகிறது.

—[உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து]

எழுந்துவிட்டது தமிழ் ஞாயிறு---
அது முன்னைப் பழமையுடன் புதுப் புதுமை சேர்க்கும்!

"தமிழினம் கடந்தகால வரலாற்றுச் சிறப்புடையதாயினும், இடைக்காலத்தில் அதற்கேற்பட்ட வீழ்ச்சி, மறைக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்று.

"பிற மொழி நுழைவு தமிழின் தூய்மையைக் கெடுத்தது; ஆயினும் சிறந்த தமிழ்ச் சான்றேர்கள், தமிழின் தூய்மையைக் காப்பாற்றிவந்தனர்!

"அயலினத்தாரின் நுழைவால் ஓரினமாக வாழ்ந்த தமிழினம், பலநூறு சாதிகளா[illegible] பிரிக்கப்பெற்றது. தமிழினத்தையே சார்ந்த ஒரு சாதியினர் பிறிதொரு சாதியின[illegible]ரிடம், 'ஓரினம்' என்ற அடிப்படையை மறந்து காழ்ப்புக் கொண்டனர்; பகை பாராட்டினர்; இந்த இன்னுத சூழ்நிலையை அவர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

'புறப்புற இருள்நெறி கடிந்து தமிழ் ஞாயிறு எழுகின்றது! இந்த எழுச்சி, தமிழக வரலாற்றில் முன்னைப் பழைமையைப் புதுப்பிக்கும்! புதிய புதுமைகளைச் சேர்க்கும்!"

---குன்றக்குடி அடிகளார்

தமிழ்ப் பண்பு தரணி முழுமைக்கும் தேவைப்படும்

அதனைத் தனியே பிரித்தெடுக்க ஆழ்ந்து ஆராயவேண்டும்

பொருட்காட்சித் திறப்பு விழாவில்

அண்ணா—இராஜாஜி—இலட்சுமணசாமி உரை

சென்னை, சன. 4—

"புதைபொருள்மீது மண்மேடு ஏறஏற, அப்பொருளை வெளிக் கொண்டுவந்து அறிந்துகொள்வது மிகவும் கடினம்; தமிழ் ஆராய்ச்சியில் முதலில் கிளிஞ்சல்தான் கிடைக்கும்; ஆழக் கல்லி எடுத்தால்தான் பண்பாடு கிடைக்கும்; பிற பண்பாடு கள் வேறு பிணைந்து இருப்பதால், தமிழ்ப் பண்பாட்டைப் பிரிப்பது கடினம்; ஆனால் அப்படிப் பிரித்தேடுக்கப்படும் பண் பாடு, தரணி முழுவதற்கும் தேவைப்படும்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டுப் பொருட்காட்சித் திறப்புவிழாவில் உரையாற்றுகையில் எடுத் துரைத்தார்.

தமிழர் நாகரிகத்தைப் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய 500 பக்கக் கையேடு ஒன்றை முதலமைச்சர் அண்ணா வெளியிட்டு உரையாற்றினர்.

இவ்விழா, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராஜாஜி

இராஜாஜி அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழில் ஆராய்ச்சி நடத்துவது [illegible]வும் கடினம்; ஒழுங்காகத் [illegible] நாட்டு வரலாறு எழுதப் [illegible]த்தே இதற்குக் காரணம். [illegible]மிழகத்தின் பண்டையப் பெருமைகளைப் பற்றி அறியவேண்டும் என்ற ஆர்வம் இப்போது செயலாக மாறியிருக்கிறது. அறிஞர்கள் பலர் ஆராய்ந்து, பல பொருள்களை வெளிக் கொண்டு வந்திருக்கின்றனர்; அவற்றையெல்லாம் இப் பொருட்காட்சி மூலம் மக்கள் கண்டறிய நல்வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

"தவறான காரியங்களை நாம் பின்பற்றக்கூடாது; நல்ல ஒழுக்கத்துடனும், நல்ல நாகரிகத்துடனும் நடந்துகொள்வதுதான் புனிதமான தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாகும். அந்தப் பண்பாட்டை நாம் ஒவ்வொருவருக்கும் புகட்டவேண்டும்."

ஏ. இலட்சுமணசாமி

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் முதலில் சிறிதுநேரம் தமிழில் பேசிப் பிறகு ஆங்கிலத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழர் நாகரிகம், உலகிலுள்ள வேறு எந்த நாட்டின் நாகரிகத்துக்கும் குறைவானதல்ல. நம் மூதாதையர் நடந்து காட்டிய பண்புடன் நாமும் நடந்து புகழ் தேடவேண்டும்.

"சிறிது காலமாக நம் நாட்டில் நாகரிகம் சீர்கெட்டு வருவதாகத் தெரிகிறது. இதைத் தடுத்து நிறுத்திப் பண்டைப் புகழ், பெருமையுடன் நாம் வாழ வழி தேடவேண்டும்."

இவ்விழா, திரு. டி. எம். சௌந்தரராசனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

பொருட்காட்சிக் குழுத் தலைவர் திரு. சா. கணேசன் அனைவரையும் வரவேற்றார்.

செயலாளர் திரு. இரா. நாகசாமி இறுதியில் நன்றி தெரிவித்

ரோஜா

பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

அண்ணனை முந்திய தம்பி!

"காமராசர் பேசுகையில், 'முதல் உலகத் தமிழ் மாநாட்டையே இங்கே நடத்தியிருக்க வேண்டும்; தவறிவிட்டோம்' என்று கூறினர்.

"எப்போதும் அண்ணன் கொஞ்சம் மெதுவாகத்தான் இருப்பான்; தம்பிதான் எதிலும் ஆர்வத்துடன் இருப்பான்; அதனாலேதான், முதல் மாநாட்டை மலேசியா கூட்டும் அளவுக்கு ஆயிற்று; இங்கே இரண்டாவது மாநாட்டைக் கூட்டுகின்ற நிலை ஏற்பட்டது.

"எனினும், இந்த அளவுக்குச் சிறப்பாக இங்கே நடக்கும் மாநாட்டையே நாம், முதல் மாநாடாகவும் கருதிமகிழலாம்!"

—அறிஞர் அண்ணா

(உலகத் தமிழ் மாநாட்டுத் துவக்க விழாவில்)

சீன மண்ணில் தமிழ்க் கல்வெட்டு!

செஞ்சினுவின் கீழ்க்கரையோரத்தில்—புகேயின் மாவட்டத்துக் கடற்கரைப் பட்டினமான சுவான் சௌ நகரில்—ஊ பாவோ தெருவில்—ஒரு தனியார் வீட்டில் ஒரு தமிழ்க் கல்வெட்டு கிடைத்துள்ளதாம்; அதையொட்டிக் கொஞ்ச தொலைவில் இன்னொரு கல்வெட்டும் கிடைத்துள்ளதாம்; இரண்டும் ஒரே கல்வெட்டின் உடைந்த இரு பகுதிகளோ என்று சந்தேகிக்கப்படுகின்றன!

சாதாரண வெண்கல்லில் அமைந்த இவற்றில் ஒன்று, 32 செ. மீ உயரமும் 55 செ. மீ. அகலமும் உடையதாய் உள்ளது; மற்றொன்று, 32 செ. மீ. உயரமும் 66 செ மீ. அகலமும் உடையதாய் உள்ளது.

ஒவ்வொன்றிலும் ஐந்து தமிழ் வரிகளும், ஒரு சீன வரியும் காணப்படுகின்றன.

இன்னம் அந்தக் கல்வெட்டு முழுமையாகப் படிக்கப்படவில்லை; ஆனால், சித்திரை நாள்—உடையார்—ஏரியருளப்பண்ணி—சம்பந்தப் பெருமாள் போன்ற சில சொற்கள் மட்டும், தெளிவாகப் படிக்கப்படும் அளவில் உள்ளன.

எழுத்தமைப்பை ஒட்டி, அவை, 'இடைக் காலச் சோழர் காலத்தவையாக இருக்கவேண்டும்' என்று கருதுகிறார்களாம்!

உலகத் தமிழ் மாநாடு

பூம்புகார் நகர் — தீவுத் திடல் — சென்னை-1968

பட்டி மன்றம்

சன. 6-ம் நாள்முதல் 9-ம் நாள் வரை

6—1—68 காலை 9-30 மணி: **'சிலப்பதிகாரத்தில் அன்பிற் சிறந்தவள் கண்ணகியா? அல்லது மாதவியா?'**

தலைவரை முன்மொழிதல்: திரு. டாக்டர் சுகந்தி இராசகோபாலன்; வழிமொழிதல்: திரு. புலவர் நடேசன்; தலைவர்: திரு. முத்து இராசாக்கண்ணனர் பி.ஓ.எல். (ஆனர்சு)

கண்ணகி	மாதவி
திருமதி தே. தியாகராசன் எம்.ஏ.	திரு. நமசிவாயம் எம்.ஏ.
திரு. மு. அண்ணாமலை எம்.ஏ., எம்.லிட்.	திருமதி காமாட்சி குமாரசாமி எம்.ஏ.

நன்றி கூறல்: திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி

7—1—68 காலை 11-30 மணி: **'பாரதிதாசன் கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுவது புரட்சி உணர்வா அல்லது தமிழ் உணர்வா?'**

தலைவரை முன்மொழிதல்: திரு. இரா. சனார்த்தனம்; வழிமொழிதல்: திரு. மா. செங்குட்டுவன்; தலைவர்: மாண்புமிகு அமைச்சர் திரு. மா. முத்துசாமி.

புரட்சி உணர்வு	தமிழ் உணர்வு
திரு கு. சிவஞானம் எம்.ஏ.	திரு. கணேச கோபாலகிருட்டின[illegible] [பி எஸ்சி
கவிஞர் நாவரசு	திருமதி இராஜேசுவரி நடராசன் பி.ஏ.

நன்றி கூறல்: திரு. டாக்டர் சுகந்தி இராசகோபாலன்

8—1—68 மாலை 4 மணி: **'சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ் சிறப்[illegible] வளர்ச்சி பெறவில்லை'**

தலைவரை முன்மொழிதல்: திரு. ஒ. அ. கனகசபை; வழிமொ[illegible]தல்: திரு. அடியார்; தலைவர்: திரு. ப. சு. மணியம்.

வளர்ச்சி பெறவில்லை	வளர்ச்சி பெற்றிருக்கிறது
புலவர் நன்னன் எம்.ஏ.	எம். முகம்மது முஸ்தபா
கோ. இளங்கோவன் பி.ஏ.பி.டி.	ப. குணசேகர் பி.ஏ.பி.டி., எல்.எல்.பி.

நன்றி கூறல்: திரு. இரா. சனார்த்தனம்

9—1—68 மாலை 3-30 மணி: **'வளருந் தமிழ்'** — அரசியலே தமிழை வளர்க்கிறது—கல்வியே தமிழை வளர்க்கிறது—பத்திரிகைகளே தமிழை வளர்க்கின்றன.

தலைவரை முன்மொழிதல்: திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி; வழிமொழிதல்: திரு. மா. செங்குட்டுவன்; தலைவர்: மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்.

அரசியலே தமிழை வளர்க்கிறது	கல்வியே தமிழை வளர்க்கிறது
செ. கந்தப்பன் எம்.ஏ., எம்.பி.	திரு. இரா. அரங்கராசன் எம்.ஏ.
ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ.	திருமதி ஜெயா முனியசாமி எம்.ஏ.

பத்திரிகைகளே தமிழை வளர்க்கின்றன

நாரண துரைக்கண்ணன், ஔவை து. நடராசன் எம்.ஏ., எம்.லிட்.

நன்றி கூறல்: திரு. ஒ. அ. கனகசபை

10%

பொங்கல் விசேஷ தள்ளுபடி

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி துணிகள்

4-1-68 முதல் 17-1-68 வரை

எல்லா கோ-ஆப்டெக்ஸ் ஜவுளிகளுக்கும் கிடைக்கும்

தமிழகத்திலுள்ள எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், பாண்டிச்சேரி, காரைக்கால் பிரதேசங்களிலும் கிடைக்கும்

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

34/1-ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.



ELEGANT

கலையழகு மறந்தார் தமிழர்-கண் மூடிக்கிடந்தார்-

மதுரைச் சித்திர மண்டபம் அமெரிக்கக் கண்டத்திற்குச் சென்றுவிட்டது!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டைக் களவாடி கன்னனுக்கு விற்றுவிட்டாராம்; மற்றவர்கள் இதனை அறிந்தும், களவாடியவருக்கு அஞ்சி, அரசரான கிருஷ்ணதேவராயருக்குத் தெரிவிக்காமல் இருந்துவிட்டனராம்; இதனை அறிந்த புலவர் ஒருவர், பஞ்சவர்ணக் கிளி ஒன்றை வாங்கி அதற்கு ஒரு வெண்பாவைக் கற்றுக் கொடுத்து வைத்தாராம்; கிருஷ்ணதேவராயர், கண்காணிப்புக்காகக் கோயிலுக்கு வந்தபோது, அக்கிளியைப் புலவர் கோயிலுக்குக் கொண்டுவந்து ஓரிடத்தில் கட்டி வைத்தாராம்; பஞ்சவர்ணக் கிளியின் அழகில் ஈடுபட்ட அரசர் அதனிடம் வந்த போது, அது,

"முன்னாள் அறுபத்துமூவர் இருந்தார்—அவரில்
இன்னாள் இரண்டுபேர் ஏகினர்—கன்னன்
நறுக்குகின்றான் விற்றுவிட்ட நாகராசநம்பி
இருக்கின்றான் கிட்டின ராயா."

என்று கூறிற்றாம். பிறகு அரசர் விசாரித்து உண்மை அறிந்து, களவாடியவரைத் தண்டித்தாராம். நிற்க.

சமயப் பகைக்கு இலக்காகி சிற்பக் கலைகள் அழிந்தன!

சமயப் பகை காரணமாகவும் பல சிற்பக் கலை உருவங்கள் அழிக்கப்பட்டன. பௌத்த சிற்ப உருவங்களை, ஜைனர்—சைவர் வைணவர்கள் அழித்துவிட்டதும், ஜைன சிற்ப உருவங்களைப் பௌத்தர் — சைவர் — வைணவர் அழித்துவிட்டதும், சைவ சமய சிற்ப உருவங்களை வைணவர் அழித்துவிட்டதும், வைணவச் சிற்ப உருவங்களைச் சைவர் அழித்துவிட்டதும் சமயப் பொருமையால் விளைந்த சிற்பக் கலை அழிவுகளாம்.

மகாபலிபுரத்தில், 'இராமாநுச மண்டபம்' என்று இப்போது பெயர் வழங்குகிற குகைக் கோயில், ஆதிகாலத்தில் மும்மூர்த்திகளின் கோயிலாக இருந்தது; அது, இராமாநுசர் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட குகைக் கோயில். 'அத்யந்தகாம பல்லவேச்சரம்' என்னும் பெயருடனிருந்த அந்தக் குகைக் கோயிலை, விஜயநகர அரசர் காலத்தில், வைணவர்கள் கைப்பற்றி, 'இராமாநுச மண்டபம்' என்று பெயர் கொடுத்து, அதிலிருந்த சிற்பக் கலை உருவங்களை அடியோடு அழித்துவிட்டார்கள்!

இந்தக் குகைக் கோயிலில் இருந்த துவாரபாலகர் உருவங்களையும், கருவறையின் சுவரில் இருந்த சோமஸ்கந்தர் உருவங்களையும் உளியினால் செதுக்கி அழித்துவிட்டதோடு, மண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும் கற்பாறையில் பெரிய அளவில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருந்த சிற்ப உருவங்களை உளிகொண்டு செதுக்கி அழித்துவிட்டார்கள்! அழிக்கப்பட்ட அந்தச் சிற்பங்களின் உருவங்கள் எவை என்று இப்போது நமக்குத் தெரியவில்லை; ஆனால், அவை சைவ சம்பந்தமான சிற்ப உருவங்களாக இருந்திருக்கவேண்டும்.

அவை அழிக்கப்படாமல் இப்போது இருக்குமானால், மகாபலிபுரத்தில் இன்னொரு இடத்தில் உள்ள மகிஷாசுர மண்டபத்தில், இப்போது இனிய—அழகிய கலைச் செல்வங்களாகக் காட்சியளிக்கிற அனந்தசயன மூர்த்தி, 'மகிஷாசுரன் போர்' என்னும் புடைப்புச் சிற்பங்களைப் போலவே இனிய—அழகிய சிற்பக் கலைச் செல்வங்களாக இருந்திருக்கும்; ஆனால், அந்தோ! சமய வெறியர்களால் அவை முழுவதும் அழிக்கப்பட்டன—இல்லை—கொலை செய்யப்பட்டன! அந்தச் சிற்ப உருவங்கள் அமைந்திருந்த இடங்களின் அடையாளங்கள் இப்போதும் கற்பாறையில் காணப்படுகின்றன!

காஞ்சிபுரத்துக் காமாட்சியம்மன் கோயிலிலே சில ஆண்டுகளுக்கு முன்னர், சில புத்தர் உருவச் சிலைகள் இருந்ததைக் கண்டேன்; அவைகளில் சில, சிறிது உடைபட்டிருந்தன. சில ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் சென்று பார்த்தபோது, அந்தப் புத்தர் உருவச் சிலைகள் எல்லாம் துண்டு துண்டாக உடைக்கப்பட்டுக் கற்குவியலாகப் போடப்பட்டிருந்ததைக் கண்டேன்; சமயப் பொருமை காரணமாக இவைகள் உடைத்து அழிக்கப்பட்டன!

காமாட்சியம்மன் கோயில் குளத்துப் படித்துறைக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு புத்தர் உருவச் சிற்பங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தன; அந்தப் புத்தர் உருவங்களை, 'காமாட்சி லீலாப் பிரபாவம்' என்னும் நூல், 'பூதங்கள்' என்று கூறுகிறது.

வெண்மையான சலவைக் கல்லினால் புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்டிருந்த அந்த இரண்டு உருவங்களும், உண்மையில் புத்தர் உருவங்களே ஆகும்; அந்தச் சலவைக் கல் புத்த உருவங்கள் இப்போது அங்கே காணப்படவில்லை; ஆனால், சிமெண்டினால் செய்யப் பட்ட இரண்டு பெரிய விகாரமான பூத உருவங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன! இதுவும், சமயப் பொருமையினால் விளைந்த உருமாற்றங்களாகும்!

இவற்றை ஏன் இங்குக் கூறினேன் என்றால், 'சமயப் பொருமையினால், அழகிய—இனிய சிற்பக் கலைகள் அழிக்கப்பட்டு மறைக்கப்படுகின்றன' என்பதைக் கூறுவதற்கே!

நமது நாட்டுச் சிற்பக் கலைப் பொருட்கள் பெரும்பாலும் சமயத் தொடர்புடையவை; சைவ—வைணவ—பௌத்த—ஜைன சமயத் தொடர்பான பல சிற்ப உருவங்கள், நமது நாட்டில், கல்லிலும், செம்பிலும் அமைந்துகிடக்கின்றன. சமயப் பகைமை பாராட்டாமல் அக்கலைப் பொருள்களையெல்லாம் செவ்வனே பாதுகாக்க வேண்டும்.

சமயப் பகையினால் அழிக்கப்பட்ட சிற்பக்கலைச் செல்வங்கள் பல; எல்லா சமயத்துச் சிற்பங்களிலும் கலையழகு உண்டு; ஆகவே, கலைச் செல்வங்களில் சமயப் பகையும், சமயப் பொருமையும் காட்டாமல், அவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

நயவஞ்சகத் துரோகிகள் நாட்டில் இன்னும் உலவுகின்றனர்!

இவ்வாறு மத வெறியர்களால் அழிக்கப்பட்டதுபோக—நீரிலும் நிலத்திலும் மறைக்கப்பட்டது போக—வேறு சில சிற்பக் கலைகள், அயல் நாடுகளுக்கு—அமெரிக்கா, ஐரோப்பா கண்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஐரோப்பாவில் உள்ள ஆங்கிலேயர்களும், பிரான்சு நாட்டவரும், டச்சுக்காரர் முதலியவர்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டவரும் சிற்பக்கலைப் பிரியர்கள்; அவர்கள், தங்கள் நாட்டுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; ஆகவே, நமது நாட்டுச் சிற்பக் கலைப் பொருள்களையும் அவர்கள் இங்கிருந்து வாங்கிக்கொண்டு போனார்கள்.

இவ்வாறு மேல்நாடுகளுக்குச் சென்ற கலைச் செல்வங்களில் பெரும்பாலும், நமது நாட்டுக் கோயில்களிலிருந்து கொண்டுபோகப்பட்டவையே! நமது நாட்டுத் தரகர்கள் (ஏஜெண்டுகள்) இந்தச் சிற்பக் கலைகளை அவர்களுக்கு விற்றார்கள்; எப்படியென்றால், கோயில் 'பெருச்சாளி'கள், கோயில்களிலிருந்து சிற்ப உருவங்களை (இவை பெரும்பாலும் உலோகங்களினால் செய்யப்பட்டவை)க் களவாடிக் கொண்டுபோய் நமது நாட்டுத் தரகர்களுக்குச் சிறு தொகைக்கு விற்றுவிடுவார்கள்!

இவைகளை வாங்கிய தரகர்கள் யார் என்றால், நமது நாட்டில் பிறந்த 'பெரிய மனிதர்கள்'தான்! இவர்களுக்கு நாட்டுப் பற்றோ, கலைப் பற்றோ எதுவும் கிடையாது! இவர்களுக்கு உள்ள ஒரே பற்று என்னவென்றால், பணப் பற்றே! 'எப்படியாகிலும் பொருள் சேர்க்கவேண்டும்' என்பதே இவர்கள் கருத்து.

நமது நாட்டுக் கலைப் பொருளைக் களவாடி ஐரோப்பியருக்கு விற்றுப் பதினாயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும் பொருள் தேடியவர்கள், இன்னும் நமது நாட்டில் இருக்கிறார்கள்.

நமது நாட்டுக் கோயில்களிலேயுள்ள கலைச்செல்வங்களைக் களவாடிய—அல்லது களவு செய்வதற்கு உடன்பட்டிருந்த—அல்லது களவாடிய பொருள்களை வாங்கி விற்ற குற்றத்திற்குட்பட்டவர்களான இவர்கள்—நாட்டின் கலைத் துரோகிகளாகிய இவர்கள், பெரிய மனிதர்களாகவும், பட்டம்—பதவி பெற்றவர்களாகவும் இன்றும் வாழ்கிறார்கள்!

இவர்கள் மூலமாக நமது நாட்டிலிருந்து பழைய கலைச் செல்வங்கள் எத்தனையோ மேல்நாடுகளுக்குப் போய்விட்டன! இவையெல்லாம் ஆங்கிலேயர் ஆட்சியில் நடைபெற்றன!

இந்தியா விடுதலை பெற்ற பிறகு, 'இந்தியக் கலைப் பொருள்கள் அயல் நாட்டிற்கு அனுப்பப்படக்கூடாது' என்னும் சட்டம் ஏற்பட்டிருக்கிறது; இதனால், இனி நமது கலைப் பொருள்கள், அயல்நாட்டிற்குப் போக வழியில்லை; ஆயினும், கள்ளத்தனமாகப் போகக்கூடும் அல்லவா?

கலைச் செல்வங்களை அயல்நாட்டுக்கு விற்கும் கலைத் துரோகிகள்—இன்னும் கலைப் பொருள்களை அயல்நாடுகளுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறார்கள்!

அவர்கள், தமது சொந்த கலைப் பொருள்களை விற்றாலும் நாம் குறை கூறமாட்டோம்; ஆனால், தேசத்திற்கும் நாட்டிற்கும் உரியதான கலைப் பொருள்களை வஞ்சகமாகவும், சூதாகவும் தமக்குச் சொந்தப் பொருளாக்கிக்கொண்டு அவற்றை வெளிநாடுகளில் விற்றுப் பணம் சேர்ப்பது என்றால், அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கலாமா என்பதே எமது கேள்வி!

காஞ்சிபுரம், தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்த பல கலைச் செல்வங்கள் இவ்வாறு அயல்நாடுகளுக்குப் போய்விட்டன.

காஞ்சிபுரத்தில் பேர்போன பல்லவர் கோயில் ஒன்றில் இருந்த புராதன நடராசர் விக்கிரகம், எவ்வாறு ஐரோப்பாக் கண்டத்துக்குப் போய்விட்டது என்பதை ஒருவர் கூறினார்.

அக்கோயிலில் இருந்த பழைய நடராசர் விக்கிரகத்தைத் தன் நாட்டுக்குக் கொண்டுபோக விரும்பிய ஒரு ஐரோப்பியர், அக்கோயில் அதிகாரிக்குக் கைக்கூலி கொடுத்துச் சரிபடுத்திக்கொண்டாராம்; பிறகு, சிற்பியிடம் (ஸ்தபதியிடம்) அதைப்போலவே ஒரு வெண்கல நடராசர் உருவம் செய்யச் சொல்லி—புதிய நடராசர் உருவத்தை அக்கோயிலில் வைத்துவிட்டுப் பழைய நடராசர் உருவத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டாராம்! பழைய நடராசருக்குப் பதிலாகப் புதிய நடராசர் வந்துவிட்டார்! ஆனால், புதிய நடராசரை எடுத்துக்கொண்டு போகாமல், பழைய நடராசரை அந்த ஐரோப்பியர் ஏன் கொண்டுபோனார்?—அதில்தான் சூட்சமம் இருக்கிறது—பழைய நடராசர் உருவத்தில் கலையழகு நிறைந்திருந்தபடியினால் அதை எடுத்துக்கொண்டு போனார்! ... களே! நமது சிற்பக்கலைகள் எப்படியெல்லாம் கொள்ளைபோ... போகின்றன பாருங்கள்!

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

ஸைரப்பர்

சிறந்த மோட்டார் உறுப்புகள்



பியட் 1100, ஹிந்துஸ்தான் அம்பாஸிடர்/லாண்ட்மாஸ்டர் கார்களுக்கும், பார்கோ, அசோக லேலாண்ட் பஸ்/லாரிகளுக்கும் உகந்த ரப்பர் உறுப்புகள் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்த உறுப்புகளுடனும் விநியோகிக்கப்படுகின்றன.

செயற்கை ரப்பரிலிருந்து உருவாக்கப்பட்ட ஸைரப்பர் உறுப்புகள் நீடித்து உழைக்கும்.



TVS

SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ரப்பர் யூனிட், மதுரை 7

வழக்கில் வந்திட வேண்டும் யாழ்—

பண்களின் ஆராய்ச்சியில் முனைப்புக் காட்ட வேண்டும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்குப் பாதுகாப்பளிப்பது நமது முதற் கடமையன்றோ?

மேல்நாட்டார் கள்ளத்தனமாகவும் நல்லத்தனமாகவும் கொண்டு போன கலைச் செல்வங்கள் போகட்டும்; நமது நாட்டார், பழைய கோயில்களைப் புதுப்பித்தபோது அழிந்துபோன கலைச் செல்வங்கள் போகட்டும்; மண்ணிலும் குளங்குட்டைகளிலும் மறைந்துகிடக்கும் கலைச் செல்வங்கள் போகட்டும்; இவையெல்லாம் போனாலும்கூட, இன்னும் ஏராளமான கலைச் செல்வங்கள் நமது நாட்டில் இப்போதும் எஞ்சியுள்ளன.

பல சிற்பக் கலைப் பொருள்கள், பற்பல கோயில்களில் கலைச் சிறப்பு உணராதவர்களால் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன! பல சிற்பக் கலைகள், இருட்டறைகளில் மறைந்து கிடக்கின்றன! இவைகளையேனும் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நமது கடமையாகும்.

பல கற்சிற்பங்கள் வயல்களிலும், ஊர்ப்புறங்களிலும் நாதியற்றுக் கிடப்பதைப் பல இடங்களில் கண்டிருக்கிறேன்; குளங்குட்டைகளின் ஓரத்தில் துணி தோய்க்கப் போட்டிருந்த சில கற்களைப் புரட்டிப் பார்த்தபோது அவற்றில் சிற்பங்கள் அமைந்திருந்ததைப் பார்த்திருக்கிறேன்; இவையெல்லாம் எதைத் தெரிவிக்கின்றன?—'நமது நாட்டில் சிற்பக் கலையுணர்வும், அவற்றைக் கண்டு சுவைக்கும் அறிவும் மங்கி மழுங்கி மறைந்துவிட்டன' என்பதைக் காட்டுகின்றனவன்றோ?

'கலை, கலை' என்று தாள்களில் எழுதப்படுகின்றன; மேடைகளில் பேசப்படுகின்றன. 'கலை' என்றால், 'சினிமாவும், நடனமும், இசையும், நாடகமும்தான்' என்று பெரும்பாலோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். சிற்பம், ஓவியம் முதலியவைகளும் கலைகள் அன்றோ? அவற்றையும் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நமது கடமை அல்லவா?

மிகப் புராதனமான ஒரு கோயிலிலே இருந்த சோழ அரசனுடைய செப்புச் சிலை உருவம் ஒன்று, தனிப்பட்ட ஒருவரிடம் இருப்பதைக் கண்டு வியப்படைந்தேன்.

சாதாரணமாகக் காணப்படாததும் மிக விசித்திரமானதும் அருமையானதும் ஆன ஒரு நடராச சிற்ப உருவம், பழைமையான ஒரு கோயிலில் இருந்தது; இப்போது தனிப்பட்ட ஒருவரின் தனிவுடைமையாக அது இருக்கிறது.

இவ்வாறு பழைய கோயில்களிலே தமிழ்நாட்டவருக்குரிய பொதுச் செல்வங்களாக இருந்த கலைச் செல்வங்கள் பல. சுயநலமுடைய தனிப்பட்ட ஆட்களிடம் சிக்கிக்கொண்டுள்ளன!

இவற்றைப்பற்றி அறநிலையப் பாதுகாப்பாளரும் அரசாங்கத்தாரும் கவலை கொள்ளாமல் இருப்பது என்னே? இக்கலைச் செல்வங்கள் தமிழ்நாட்டின் பொதுச் சொத்துக்கள் அல்லவோ? இவற்றிற்குப் பாதுகாப்பளிப்பது இவர்களின் கடமையன்றோ?

ஓவியங்கள் சிதையும் வேதனைதான் என்ன?

கட்டிடக் கலை, சிற்பக் கலை இவற்றைப்பற்றிச் சிறிதளவாவது பொதுமக்களுக்குத் தெரியும்; இவை கோயில்களிலே அடிக்கடி காணப்படுவதால், ...ற்றை அறியாமல் இருக்க ...பாது; ஆனால், ஓவியக் ...யைப் பற்றிப் பொதுமக் ...

...குத் தெரியாது; அதாவது, பண்டைக் காலத்துச் சித்திரங்களைப் பெரும்பாலோர் அறிந்திருக்கமாட்டார்கள்! பண்டைக் காலத்து ஓவியங்கள் எல்லாம் சுவர் ஓவியங்களாக இருந்தன!

அரசர்—குறுநில மன்னர்—செல்வர் முதலியோர், அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் சுவர் ஓவியங்களை எழுதி வைத்தார்கள்; கோயில்களிலும் சித்திரங்களை எழுதி வைத்தார்கள்; கட்டிடக்கலை—சிற்பக் கலைகளைவிட, சித்திரக் கலை மிக நுட்பமானது! தகுந்த பாதுகாப்பு இல்லாவிட்டால் எளிதில் அழிந்துவிடக் கூடியது!

நகரங்களைத் தவிர மற்ற ஊர்களில் வாழ்ந்த குடிமக்கள் அக்காலத்தில் ஓலை வீடுகளிலே வசித்தார்கள்—ஏன்—இக்காலத்தில்கூட பெரும்பாலும் ஓலை வீடுகளில்தான் வாழ்கிறார்கள்; ஆகவே, ஓலை வீடுகளில் சுவர் ஓவியங்களை எழுதிவைக்கும் வாய்ப்பு ஏற்படலில்லை!

ஓவியங்கள் அக்காலத்தில் அரண்மனைகளிலும், மாளிகைகளிலுமே இடம்பெற்றன! அரண்மனைகளும் மாளிகைகளும் அழிந்துவிட்டபோது, சித்திரக் கலைகளும் மறைந்துவிட்டன!

சேர—சோழ—பாண்டியர்களின் அரண்மனைகளும், சித்திர மாடங்களும் எங்கே?—வள்ளல்கள், சிற்றரசர்களின் மாளிகைகள் எங்கே?—அவையெல்லாம் அழிந்துவிட்டன! அவற்றோடு நுட்ப நுண்கலையாகிய சுவர் ஓவியங்களும் மறைந்துவிட்டன!

மகேந்திர வர்மனும் அவனுக்குப் பின் வந்த பல்லவ அரசர்களும் அமைத்த குகைக் கோயில் சுவர்களில், வர்ண ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன; அவையும், காலப் பழமையினாலும் அழிவு வேலைகளினாலும் மறைந்துவிட்டன!

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

"டிவிஎஸ்ஸில் ரீடிரெடிங் செய்ததால் டயர் அதிக மைல் உழைத்தது"



"நான் ஒரு முறை டிவிஎஸ்ஸில் ரீடிரெடிங் செய்தேன். அது முதல் நான் வேறுயாரிடமும் சென்றதில்லை. டிவிஎஸ் ரீடிரெடிங் மிகவும் சிறந்தது. அதனால் டயருக்காக முன்னுள் செலவு பாதிக்குமேல் குறைகிறது."

உங்கள் டயர்களை டிவிஎஸ்ஸில் விஞ்ஞான ரீதியில் ரீடிரெடிங் செய்து நடைமுறைச் செலவைக் குறையுங்கள்

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
தொழிற்சாலைகள்: பங்களூர் - கோயமுத்தூர் - மதராஸ் புதுக்கோட்டை - செகந்திராபாத் - திருநெல்வேலி

சிற்பக் கலையில் வடமொழிச் சூது!

★

சிற்பக் கலையும் கோயில் கட்டும் முறைகளும் தமிழகத்தின் தனியுடைமை என்பது உலகம் ஒப்புக்கொண்ட உண்மை.

'தமிழர்' என்றாலே, 'தலை சிறந்த கோயில் அமைப்போர்—கோபுரம் சமைப்போர்' என்று பிரிட்டிஷ் கலைக் களஞ்சியம் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்கள்.

அங்ஙனமாயின், இன்றுள்ள ஒரே சிற்பக்கலை நூல் 'மானசார' என்ற வடமொழி நூல் என்கிறார்களே—அது ஏன்?

தமிழக் கலையின் சிறப்புக் கலைகளுள் ஒன்று என்கிறோமே — அவற்றைப் படைத்த சிற்பிகளின் தொழில் முறைப் பெயர்கள் என்ன தெரியுமா?—

ஸ்தபதி
சூத்திரக்கிராஹி
வர்த்தகி
தக்ஷகன்

ஏன் இந்த நிலை?

இவற்றை, அமைப்பாளர்,

நூல் பிடிப்போர்—
இணைப்புச் செற்பி—
கல் தச்சர்—

என்று அழைத்த நாளே இல்லையா?

சிலைகளின் நிலைகளை,

ஸ்தானகம்
ஆசனம்
சயனம்
ஸ்தானாசனம்
சுபனாசனம்

என்பானேன்?

நின்றகோலம்—
அமர்ந்த கோலம்—
கிடந்த கோலம்—
நின்றகோலம் சார்ந்த பிறசாயல்—
கிடந்தகோலஞ் சார்ந்த பிறசாயல்—

என்ற வகையில் ஏன் சொல்லியிருக்கமாட்டார்கள்?

சிற்பங்களின் கை அமைதி அல்லது கை முத்திரைகள் ஒன்றில்கூடத் தமிழ்ப் பெயரே இல்லையே—ஏன்?

எண்ணெண் கலையும் இசைந்து உடன் வர அரங்கேறி ஆடினாளே மாதவி—அவள், வடமொழி முத்திரைகளைப் படித்தே அறிந்தாளோ?

'எங்கோ' பிழை இருக்கிறது!

'மனசார' என்ற நூல், கிட்டத்தட்ட 6, 7 நூற்றாண்டுகளில் தோன்றியதாகவே அறிஞர் சொல்கின்றனர். அப்படியானால் அந்த வடமொழி நூலுக்கு மூலத் தமிழ் நூல் எது? எங்கே இருக்கிறது?

அந்தத் தமிழ் நூல் காணக் கிடைக்காமையால், மாமல்லபுரத்தச் சிற்பக் கல்லூரி மாணவர்கள் கட்டாயமாகச் சமஸ்கிருதம் படிக்கிறார்கள்!

ஆகவே, வேண்டுமென்றே சூதுக்காரர்களால் மறைபட்டுப் போன அந்தச் சிற்பக் கலை நூலை வெளிக் கொணர முயலவேண்டும். இந்த உலகத் தமிழ் மாநாட்டு வேளையில் அந்த முயற்சியிலும் முனைய வேண்டுவோம்.

அழியாத பகுதிகளை அழியவிடாமல் பாதுகாத்திடுக!

(முன் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திர வர்மனுக்கு, 'சித்திரகாரப் புலி' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு; அன்றியும், 'தட்சண சித்திரம்' என்னும் தென் இந்திய ஓவிய நூலுக்கு உரை எழுதினான்—என்றும் கூறுகிறார்கள்.

இவன் அமைத்த குகைக் கோயில்கள் சிலவற்றிலே சித்திரங்கள் எழுதப்பட்டிருந்த அடையாளங்களும், பச்சை—மஞ்சள்—சிவப்பு முதலிய வர்ணங்களும் அங்கங்கே காணப்படுகின்றன; இதனால், அக்குகைக் கோயில்களில் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன என்பது தெரிகிறது.

நற்காலமாக எப்படியோ சித்தன்னவாசல் குகைக் கோயில் ஓவியம், மாட்டுக்காரப் பையன்களின் அட்டூழியங்களுக்கும் மற்றவர்களின் நாச வேலைக்கும் தப்பித்தவறி அரைகுறையாகவேனும் இப்போதும் இருக்கிறது! நமது தமிழ் நாட்டிலே உள்ள மிகப் பழைய காலத்துச் சித்திரம் இதுவே! இவை, கி. பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட மகேந்திரவர்மன் காலத்தில் எழுதப்பட்டவை!

மறைந்துபோன சித்திரங்கள் போக, இப்போதும் சிற்சில கோயில்களிலும், மண்டபங்களிலும், சிதைந்துபோன ஓவியப் பகுதிகள் காணப்படுகின்றன; அவற்றையெல்லாம் கிடைத்தவரையில்—அரைகுறையாக இருந்தபோதிலும்—போற்றிப் பாதுகாக்க வேண்டும்; பிரதிகள் எழுதி, அல்லது நிழல் (போட்டோ) படம் பிடித்து பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; இதற்கு ஓவியக் கலைஞரும், நிழற்படம் பிடிப்போரும், அரசாங்கத்துப் பழம்பொருள் ஆராய்ச்சித் துறையினரும் (ஆர்க்கியாலஜி இலாகா) முன்வந்து உதவிசெய்ய வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டம்—வடபாதிமங்கலம் இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள 'போளூர் திருமலை' என்னும் குன்றின் மேல் ஜைனக் கோயில் ஒன்று உண்டு; இதற்கு, 'சிகாமணிநாதர் கோயில்' என்பது பெயர்; இக்கோயில் குகையில், சோழர் காலத்து ஓவியங்கள் இப்போது சிதைந்து அழிந்து காணப்படுகின்றன. (புதிதாக எழுதப்பட்ட தற்காலச் சித்திரங்களும் இங்கு உண்டு. இவற்றை நான் கூறவில்லை) இப்பழைய சித்திரங்களை அரசாங்கத்துப் பழம்பொருள் ஆராய்வோர் (ஆர்க்கியாலஜி இலாகா) சில ஆண்டுகளுக்கு முன்னர் படம் பிடித்தார்கள்; அந்தப் படங்களின் நகல்கள் வேண்டுமென்று கேட்டபோது, 'அவை கிடைக்காது' என்று சொல்லிவிட்டார்கள்.

காரணம் என்னவென்றால், படமெடுக்கப்பட்ட 'போட்டோ நெகிடிவ்' உடைந்துவிட்டதாம்; அதன் பிறகு அவர்கள் மீண்டும் படம் பிடிக்கவில்லை; இக்கோயில் ஓவியங்களும் அழிந்து கொண்டிருக்கின்றன!

காஞ்சீபுரத்து ஏகாம்பரேசுவரர் கோவில் பௌர்ணமி மண்டபத்தில், அன்னப் பறவை முதலியவற்றின் ஓவியங்கள் எழுதப்பட்ட சிதைவுகள் காணப்பட்டதைச் சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கண்டேன்.

காஞ்சி ஏகாம்பரேசுவரர் நூற்றுக்கால் மண்டபத்தின் மேல்பகுதியில், சில ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய அளவில் பல ஓவியங்கள் இருந்ததைக் கண்டேன். சிறிது அழிந்து போயிருந்தாலும், பெரிதும் நன்னிலையிலே இருந்தன. வர்ணங்கள் அழிந்துபோன இடங்களில் கோடுகள் புனையா ஓவியமாக நிறைவு செய்திருந்தன; அவை, பிற்காலத்து ஓவியங்கள்தான்; 400 அல்லது 500 ஆண்டு பழைமை இருக்கலாம்.

அவற்றை நிழற் படம் (போட்டோ) பிடிக்கவேண்டுமென்று அடுத்த ஆண்டு சென்றபோது—அந்தோ—அவை மறைந்துபோனதைக் கண்டு துணுக்குற்றேன்? கோயில் அதிகாரிகள் அந்தச் சித்திரங்களின் மேலே கோபி சுண்ணாம்பை நிறையப் பூசி மண்டபத்தை 'அழகு' செய்திருந்தார்கள்! அவர்கள் நீடூழி வாழ்க!

இவ்வாறு எந்தெந்தக் கோயில்களில்—எத்தனை எத்தனை ஓவியங்கள் அழிந்தனவோ! 'ஓவியத்துக்கும் கோயிலுக்கும் என்ன சம்பந்தம்' என்று கோயில் தர்மகர்த்தர்கள் நினைக்கிறார்கள்போலும்! அதிலும், 'அரைகுறையாக உள்ள சித்திரங்கள் குற்றுயிராய்க் கிடந்து வேதனைப்பட்டுக்கொண்டிருப்பதைவிட, அடியோடு அழிந்து சுகம் பெறட்டும்' என்னும் கருணையினால், 'கொன்று' விடுகிறார்கள்போலும்!

அரைகுறையான ஓவியங்களாக இருந்தாலும் அவற்றையும் போற்ற வேண்டும். அவற்றை அழிக்க வேண்டியிருந்தால், முதலில் அவற்றைப் படம்பிடித்து வைத்துக்கொண்டு அல்லது படி எழுதி வைத்துக்கொண்டு பிறகு அழித்துவிடலாம்.

நமது நாட்டிலே பழைய கோயில்கள் பல உள்ளன; தேடிப் பார்த்தால் அவைகளிலும் சில ஓவியங்கள் காணப்படலாம். பிற்காலத்துச் சித்திரங்களாக இருந்தாலும் அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

திருவலஞ்சுழி கோயில் மிகப் பழைமையானது; அக்கோயிலிலும் ஓவியங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது; ஆனால், அவை, 'நகல்' எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அன்பர்களை வணக்கமாக வேண்டிக்கொள்வது என்னவென்றால், ஏதேனும் ஓவியங்கள் கோயில் முதலிய பழைய கட்டிடங்களில் இருக்கக் கண்டால், அவற்றை அழிய விடாமல் பாதுகாக்கவேண்டும் என்பதே!

கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் அரைகுறையாக அழிந்துபோயிருந்தாலும், அழியாத பகுதியை அழியவிடாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவற்றைப் படம்பிடித்தோ, தக்கவர்களைக் கொண்டு 'படி' எழுதுவித்தோ பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். இப்படிச் செய்வது, நமது நாட்டு ஓவியக் கலைக்குச் செய்த பெருந்தொண்டாகும்.

இசைக் கலை — நன்கறிந்த நற்கலை

இசைக் கலையைப் பாதுகாப்பதுபற்றி ஒன்றும் சொல்லவேண்டுவது இல்லை; ஏனென்றால், ஏனைய அழகுக் கலைகளைவிட அதிகமாக இசைக் கலையை மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

மேலும், பேசும் படம் (சினிமா), வானொலி நிலையம், இசையரங்கம் முதலியவை பெருகியுள்ள இக்காலத்தில், இசைக் கலை, எல்லோரும் அறிந்த நற்கலையாக விளங்குகிறது.

அரிதான வேலை—வெற்றி பெற இயலும்

இசைக் கலை சம்பந்தப்பட்ட வரையில் ஒன்று கூற விரும்புகிறேன்; யாழ், பண்டைக் காலத்திலே இந்தியா தேசம் முழுவதும் பயிலப்பட்டிருந்த ஒரு சிறந்த இசைக் கருவியாகும். வட இந்தியாவில் இக்கருவி வழக்கொழிந்த பிறகும், தமிழ் நாட்டிலே இது நெடுங்காலம் பயிலப்பட்டுப் பின்னர் கி. பி. 11-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மறைந்துவிட்டது.

யாழுடன் சம்பந்தப்பட்டவை பழைய பண்கள்; அப்பர், சம்பந்தர், சுந்தரர், திருப்பாணாழ்வார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர் முதலியவர்கள் காலத்திலும்—அவர்கள் காலத்துக்கு முற்பட்ட சங்க காலத்திலும், தமிழ் நாட்டில் பயிலப்பட்ட பண்கள் யாழ் இசையுடன் சம்பந்தப்பட்டவை.

மறைந்துபோன யாழ் இசைக் கருவியை மீண்டும் புதுப்பித்து, அதை வழக்கத்தில் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும்.

'யாழ் நூல்' என்னும் இசை ஆராய்ச்சி நூலை எழுதிய முத்தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. விபுலாநந்த அடிகள், அரிதின் முயன்று ஆராய்ந்து யாழ்க் கருவி ஒன்றைச் செய்தார்கள்; ஆனால், அக்கருவியை நாட்டில் பயன்படுத்துவதற்கு முன்பே அவர்கள் காலஞ் சென்றுவிட்டார்கள்.

அவர்கள் விட்டுச் சென்றதைத் தொடர்ந்து—முயன்று நிறைவேற்றி—மறைந்துபோன அக்கருவியை மீண்டும் இசையரங்கிற்குக் கொண்டுவர வேண்டுவது தமிழ் இசைத் துறையில் ஆராய்ச்சி செய்யும் மாணவர் கடமையாகும்; இது மிகவும் அரிதான வேலை; ஆனால், வெற்றி பெறக் கூடியதே!

மறந்தோம்—மீண்டும் புதுப்பிப்போம்

தமிழ் இசைச் சங்கம், தேவாரப் பண் ஆராய்ச்சி செய்துவருவது போற்றத்தக்கது; இவ்வாராய்ச்சியினால் சில உண்மைகள் அறியப்படுகின்றன; உதாரணமாக, யாழ் முரிப்பண்ணை எடுத்துக் கொள்வோம்.

சம்பந்த சுவாமிகள் பாடிய 'மாதர்மடப் பிடியும்' எனத் தொடங்கும் இப்பாட்டு, இக்காலத்தில், 'அடாணா' இராகத்தில் பாடப்படுகிறது. தேவார ஆராய்ச்சியின் காரணமாக, 50 ஆண்டுக்கு முன்புதான் இந்தப் பாட்டு, 'அடாணா' இராகத்தில் குருசாமி தேசிகர் என்பவரால் பாடப்பட்டு—அதனையே பின்பற்றி மற்றவர்களும் பாடிவருகிறார்கள் என்பதும், 50 ஆண்டுகளுக்கு முன்பு இப்பாட்டு, 'மேகராகக் குறிஞ்சி' என்னும் பண்ணினால் பாடப்பட்டதென்பதும் அறியப்பட்டன. இதுபோன்ற பல செய்திகளை, இசை ஆராய்ச்சியினால் அறியக்கூடும்.

பண்டைக் காலத்தில் ஆடப்பட்ட, 'கொடுகொட்டி'—'பாண்டரங்கம்' முதலிய ஆடல்களும் இப்போதும் மறைந்துவிட்டன. இவ்வாடல்களையும் மீண்டும் புதுப்பித்து அரங்கத்திற்குக் கொண்டுவர வேண்டுவது நட்டுவர்களாகிய ஆடலாசிரியர்களுடைய கடமையாகும்.

இசைக் கலையைப்போலவே, இலக்கியக் கலையைப் பற்றியும் மக்கள் அதிகமாகத் தெரிந்திருக்கிறார்கள்; ஆனால், பழைய இலக்கியக் கலைகளை இப்போது மக்கள் அதிகமாகப் போற்றுவது இல்லை. பழைய இலக்கியங்களின் பெயரைக்கூட மறந்துவிடுகிறார்கள்.

சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், முதலிய நூல்களைப் படித்து அவற்றின் இலக்கியச் சுவைகளை அறிந்து இன்புறுதல் வேண்டும். அவற்றில் கூறப்படும் கதைகளையும், சமயச் சம்பந்தமான செய்திகளையும் அப்படியே நம்பவேண்டும் என்பதில்லை; அவற்றிலுள்ள இலக்கிய அழகை—கலைச் சுவையை அறிந்து மகிழவேண்டும்.

மனிதன் பகுத்தறிவுடையவன்; அதிலும் காவியக் கலையைப் பயிலும் மனிதன் சிறந்த அறிவுடையவன்; அவன் அவைகளைப் படிப்பதனாலே, 'மூடக் கொள்கைகளுக்கு வசமாவான்' என்று கூறுவது தவறு. நிற்க.

பழைய இலக்கியங்களைத் தேடிப் பாதுகாக்க வேண்டும்; சொற்பொழிவுகள், வானொலிப் பேச்சுக்கள் முதலியவற்றின் மூலம் இலக்கியக் கலையில் சுவை கொள்ளும்படி மக்களைப் பயிற்றுவித்தல் வேண்டும். இராச இராசேசுவர நாடகம் முதலிய பழைய நாடகங்களைத் தேடிக் கண்டுபிடித்து அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும்.

இசைக் கலை, இலக்கியக் கலைகளைவிட முக்கியமாக இப்போது மக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியக் கலைகளைப் பாதுகாப்பது பற்றியே!

இசைக் கலை—இலக்கியக் கலைகளை அறிந்திருக்கிற அளவுகூடப் பொதுமக்கள், கட்டிடம்—சிற்பம்—ஓவியங்களைப்பற்றி அறிந்திருக்கவில்லை.

இக்கலைகளைப் பற்றிப் போதிய அளவு தெரியாதிருப்பதனால், நமது நாட்டு மக்கள், இக்கலைகளை அழித்து நாசப்படுத்தி வருவதோடு, 'அவற்றைப் பாதுகாக்க வேண்டும்' என்னும் எண்ணம் இல்லாமலும் இருக்கிறார்கள்.

இக்கலைகளைப் பற்றிய நூல்களை வெளியிட்டும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், பொருட்காட்சிகள் ஏற்படுத்தியும் மக்களிடையே இக்கலைகளின் அறிவை வளர்க்கவேண்டும்!

நன்றி: 'முதல் தாய்மொழி'

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானம், சென்னை-3

6-1-68 சனி மாலை 6-30 மணிக்கு

சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், ஆடவந்த தெய்வம் புகழ் தட்சணாமூர்த்தி நடிக்கும் விஜயலட்சுமி தியேட்டர்ஸ்

'பெண்ணுக்கு அழகு' நாடகம்

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

பதிவு எண்: M. 6311 ★ மலர்: 15] [இதழ்: 170 ★ சென்னை: 5—1—68 ★ வெளியூர்: 6—1—68 ★ தொலைபேசி: 51331

சங்க கால முதல் அண்ணா காலம் வரை!

வில்—கயல்—புலி இம்மூன்றும் தமிழ் இனத்தின் வெற்றிச் சின்னங்கள்---வீரத்தின் அடையாளங்கள்---ஆண்ட பரம்பரையின் அழியா புறச் சான்றுகள்!

இமயத்தில் இந்த இலச்சினையைப் பொறித்து, 'இமயவரம்பன்' என்று புகழ்பெற்ற நெடுஞ்சேரலாதனும், தமிழரை இழித்துரைத்த வடபுலத்து மன்னர்களின் நாவடக்கப் படை நடத்தி இமயம் வரை சென்று கனகவிசயர்களை வென்று -- இமயத்தில் கல்லெடுத்து அதை அவர்கள் தலையில் வைத்துக் கொணர்ந்து -- பத்தினித் தெய்வம் கண்ணகிக்குப் படிவம் சமைத்த சேரன் செங்குட்டுவன்---

ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன்---கங்கை நாட்டினரை வென்றுவந்த கங்கைகொண்ட சோழன்---கடாரம் வென்ற இராசராசன்---காவிரிக்குக் கரைகட்டி, கல்லணை சமைத்த கரிகாற் பெருவளத்தான்---கலிங்கத்தை வென்ற குலோத்துங்கச் சோழன்---இப்படித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புகழ் சேர்த்த மாமன்னர்களின் காலத்தைத் தமிழ் நாட்டின் பொற்காலமாக வரலாறு கூறுகிறது.

கூடல் மாநகராம் மதுரை மூதூரில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தை, 'தமிழ் மொழியின் பொற்காலம்' என்கிறோம்.

'தமிழ் இனத்தின் சிறப்பைத் தம் வீரத்தால் தரணிக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருந்த மூவேந்தர்களும், தமிழ் மொழியின் மாண்பைத் தம் நாவால் அறிவித்துக் கொண்டிருந்த பாவேந்தர்களும் வாழ்ந்த அந்தப் பொற்காலம் மீளுமா' என்று ஏங்கிக்கொண்டிருந்தோம்!

இதோ -- அந்தப் பொற்காலம் மீண்டிருக்கிறது! இடையிலே பல நூற்றுண்டுகளை, இருண்ட காலத்திலே கடந்துவந்துவிட்டோம்!

காரிருள் ஓட்டிடத் தன் ஒளிக்கரங்களை நீட்டி எழுந்துவிட்டான் கதிரவன்! கிழக்கு வானிலே எழுஞாயிற்றின் 'தகத்தகாய'க் காட்சியினை இன்று காண்கிறோம்!

'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற பாரதியின் வேதனைக்குரல், நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கித் தந்துவிட்டது!

'விழித்துக் கொண்டோம்; இனி எக்காலும் தமிழைச் சாகவிடோம்' என்று தமிழினம் சூளுரைத்து எழுந்துவிட்டது!

உறங்கிக்கிடந்த தமிழன், 'தமிழ் எங்கள் உயிர்' என்று உணர்ந்துவிட்டான்!

'ஊனை, உயிரை வளர்ப்பது தமிழே' என்று உரக்க முழங்கத் தொடங்கிவிட்டான்!

'தமிழைப் பழித்திட்டவரைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று புறப்பட்டுவிட்டான்!

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்ற சங்கநாதம் கேட்கிறது!

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யும் திருப்பணி துவங்கிவிட்டது!

எட்டுத் திக்கும் சென்று தமிழ் முரசு கொட்டிடும் காலம் பிறந்திருக்கிறது!

'தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'---'தமிழன் என்று சொல்லடா---தலைநிமிர்ந்து நில்லடா' என்று இனிச் சொல்லவே தேவையில்லை!

தேசியக் கவியும், புரட்சிக் கவிஞரும், கவிமணியும், நாமக்கல்லாரும் கண்ட கனவுகள் நனவாகி வருகின்றன!

'ஆடுவோமே -- பள்ளு பாடுவோமே; தமிழ் ஆட்சியின் மாட்சியில் கூடுவோமே' என்று தமிழ் மக்கள் பள்ளு பாடுகின்றனர்!

இனித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பொற்காலம்தான்! இதன் அறிகுறிதான், தமிழகத் தலைநகரில் கூடியிருக்கும் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு!

நாற்றிசையிலிருந்தும் நாற்பது நாடுகளைச் சேர்ந்த நல்லறிஞர்கள், தமிழை ஆராயத் தமிழகம் நோக்கி வந்திருக்கின்றனர்!

உலகின் பல பாகங்களிலும் ஒரு காலத்திலே தமிழ்ப் பண்பாடு நிலவி நின்றதற்கான அகச் சான்றுகளையும், புறச்சான்றுகளையும், ஆழ்ந்து --

மா. செங்குட்டுவன்

அகழ்ந்து -- ஆய்ந்து -- தெளிந்து எடுத்துக் கூற வல்லாரும், அவர்தம் கூற்றை உறுதிப் டுத்தவும் இறுதிப்படுத்தவும் தக்க சான்றோர்களும், சான்றாண்மையாளர்களும் தமிழகத் தலைநகரில் கூடியிருக்கின்றனர்!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடித் தமிழை -- அதன் தன்மையை -- தொன்மையை -- இலக்கணச் சிறப்பை -- இலக்கிய வளத்தை -- சொல்லாழத்தை -- விண்வெளி ஆராய்ச்சியில் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்க நாட்டினரும், இரஷ்ய நாட்டினரும்கூட இங்கு வந்து ஆராய்கின்றனர்!

'சனநாயகம் என்னும் மக்களாட்சி முறையை -- பாராளுமன்ற மரபை உருவாக்கி உலகிற்கு வழங்கியவர்கள் நாங்களே' என்று இன்று பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவரும், இங்கே தமிழன் கண்ட பண்டை ஆட்சி முறையை ஆராய வந்திருக்கின்றனர்!

ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் வைத்துக் குடவோலை முறையால் தேர்தல் நடத்திக் குடியாட்சி முறையைக் குவலயத்திற்கே முதன் முதல் நடத்திக் காட்டிய சோழ மன்னனின் அரசியல் திறம் கண்டு வியக்கின்றனர்! உத்திர மேரூர் செப்பேட்டுச் சாசனத்தைப் பார்த்துக் களிக்கின்றனர்!

பொதுவுடைமைக் கொள்கையையும், சமதர்மக் கோட்பாட்டையும் கொண்டு இன்று அரசாளும் நாடுகளைச் சேர்ந்தவர்களெல்லாம், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே,

'பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுளெலாம் தலை'

என்று வள்ளுவர் வகுத்தளித்திருக்கும் பொதுவுடைமை சமதர்மக் கொள்கையைக் கண்டு திகைக்கின்றனர்!

மேலைநாடுகளிலே மனித நாகரிகமே முகிழ்க்காத காலத்தில், முதிர்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தான் தமிழன்! வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு, பிறருக்கும் வழிகாட்டியது தமிழினம்!

இன்று, 'நாகரிகத்தில் முன்னேறிய நாடுகள்' எனச் சொல்லப்படும் பகுதிகளிலெல்லாம் பேச்சு மொழியே வடிவெடுக்காமல் --- மக்கள் விலங்குகளைப்போல் நடமாடிக்கொண்டிருந்த காலத்தில், தமிழன், கவின்மிகு அணிகள் பூண்டு---எழிலார்ந்த ஆடைகளுடுத்தி---கலைகள் பல வளர்த்துக் காவியங்களை வடித்துக்கொண்டும், படித்துச் சுவைத்துக்கொண்டும் இருந்தான்! தொல்காப்பியம் கண்டான்! ஐம்பெரும் காப்பியங்கள் கண்டான்! பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண் கீழ்க் கணக்கும் கண்டான்!

இவற்றிற்கும் முன்னாலே, காலத்தால் --- கடற்கோளால் மறைந்த கலைச்செல்வங்களையெல்லாம் உருவாக்கியவன் தமிழன்!

இத்துணைச் சிறப்புக்களையும் இன்று சென்னை மாநகரிலே கூடியிருக்கும் பிற நாட்டு நல்லறிஞர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்!

இத்தகையதொரு பொற்காலத்தை உருவாக்கிடத் தம் பேச்சாலும் எழுத்தாலும் - பண்பார்ந்த செயலாலும் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பியவர் தாம் இன்று, தமிழினத்தின் வழிகாட்டியாகத் திகழும் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

இதனைத்தான் உலக நாடுகள் மன்றத்தின் சமூக -- கல்வி -- பாண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநரான திரு. மா. ஆதிசேஷையா அவர்கள், அன்று கடற்கரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில் உரையாற்றியபோது -- 'சங்க கால முதல் அண்ணா காலம் வரை' என, குறிப்பிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் செய்துள்ள -- செய்துவரும் சிறப்புமிகு தொண்டினைச் சுட்டிக் காட்டினார்.

பண்டைப் பெருமையைச் சொல்லிச் சொல்லி---கேட்டுக் கேட்டு இதுகாறும் இருந்தது போதும்---இனிச் செய்யவேண்டியதென்ன? இழந்த பெருமையை மீட்டு நிலைநாட்டுவது எங்ஙனம்? உலகாண்ட தமிழ் மொழி நேற்று முளைத்த உத்தரப் பிரதேசத்து மொழிக்கு அடிமையாவதா? இதனைத்தான் இன்று தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்கிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள்! இதற்கு விடை கூறவேண்டிய பொறுப்பு நம்முடையது!